Koviloor Digital Library

தத்துவராய சுவாமிகள் அருளிய

சசிவன்ன போதம்



Acc. No: 30471
82

கோவிலூர் மடாலயம்

கோவிலூர் - 630 307 (காரைக்குடி அருகில்)

Koviloor Digital Library

Koviloor Digital Library

8-2

ஸ்ரீ தத்துவராய சுவாமிகள்

அருளிய

சசிவன்னபோதம்

கோவிலூர் ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ மெய்யப்ப ஞானதேசிக சுவாமிகளின்

அருளாணையின் வண்ணம் இந்நூல் வெளியிடப்படுகிறது.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 30491

கோவிலூர் மடாலயம்
கோவிலூர் 630 307.
(காரைக்குடி அருகில்)
போன்: 04565 - 238783
E-mail: koviloormutt@gmail.com

Koviloor Digital Library

முதற் பதிப்பு : ஆகஸ்ட் 2020
பக்கங்கள் : 64
விலை : ₹40/-

நிர்வாக அலுவலகம்
கோவிலூர் மடாலயம்
கோவிலூர் - 630 307.
(காரைக்குடி அருகில்)
தொலைபேசி: 04565 - 238783
E-mail: koviloormutt@gmail.com

சென்னையில் கிடைக்குமிடம்
கோவிலூர் மடாலயம்
52, குப்பையா தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை-33.
போன்: 044 - 24743081

கலாக்ஷேத்ரா அச்சகம்
கோவிலூர் - 630 307.

Koviloor Digital Library

ஆசியுரை

கோவிலூர் ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ மெய்யப்ப ஞானதேசிக சுவாமிகள்

பாரததேசம் முழுமையும் பரவி வளர்ந்து வரும் கோவிலூர் மரபு வேதாந்தம் கோவிலூர் மடத்தில் முறையாகக் கற்பிக்கப்பட்டு நூறு நூறு விழுதுகள் தாங்கி நிற்கக் கூடிய மகா உன்னதமான ஆலமரம் போல் வேரூன்றி வளர்ந்து வருகிறது.

சமீப காலமாக சத்சங்கங்கள், வேதாந்த வகுப்புகள், மாநாடுகள் என பலவகையாலும் தமிழகத்திலே வெகு வேகமாக பரவி புகழ் பெற்று வருகின்றது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் யாவரும் படிப்பதற்கு ஏற்ற முறையில் வேதாந்த நூல்களை வெளியிடுவதே பெரும் தொண்டாக கோவிலூர் திருமடம் கருதுகிறது. அந்தமுறையில் தற்பொழுது ஸ்ரீமத் தத்துவராய சுவாமிகள் அருளிச் செய்த ஞான நூலான சசிவன்னபோதம் எளிய தெளிவான உரையுடன் எடுத்துக்காட்டுகள், விளக்கங்கள் ஆகியவற்றுடன் வெளியிடப்படுகிறது.

வேதாந்தம் கற்க விரும்பும் ஆர்வலர்கள், முமூச்சுக்கள் அனைவருக்கும் இந்த நூல் வேதாந்த தத்துவங்களையும் அடிப்படையையும் ஸ்திரமாகத் தெரிவிக்கும் என்று நம்புகிறோம். இதனை ஐயம்திரிபற கற்றுத் தேற அனைத்து முமூட்சுக்களுக்கும் ஆர்வலர்களுக்கும் நம் மனம் கனிந்த வாழ்த்துக்கள் ஆசிர்வாதங்கள்.

ஸ்ரீ சற்குருநாதன் துணை.

Koviloor Digital Library

கோவிலூர்த் திருமட வேதாந்த மரபு

கோவிலூர் திருமடத்தில் 200 ஆண்டுகளுக்கு மேலாக சங்கரர் போதித்து அருளிய தத்துவ விளக்கங்களை குருபரம்பரையாக பாடம் நடத்தி வருகிறார்கள். வேதம், வேதாந்தம், இதிகாசங்கள் அனைத்தும் வடமொழியிலேயே எழுதப்பட்டு, பயிலப்பட்டு வந்தன. அதிலும் துறவிகளும், அந்தணர்களும் மட்டுமே கற்க வேண்டும் என்ற நியதி காலங்காலமாக அனுசரிக்கப்பட்டு வந்தது. இதனை முழுமையாக மாற்றித் தமிழ் மொழியிலே அனைத்து வேதாந்தத் தத்துவக் கருத்துக்களும் எழுதப்பெற்று, நூல்களாக உருவாக்கப்பட்டு ஆர்வமுள்ளவர்கள் யாவரும் ஜாதி, மத, இன பேதமின்றி கற்கலாம் என்று வழி முறைப்படுத்திய பெருமைக்குரியது கோவிலூர் திருமடம்.

இந்த புரட்சி அதாவது சிந்தனை மாற்றம் 15,16வது நூற்றாண்டுகளிலே ஏற்பட்டு நூல்கள் உருவாக்கப்பட்டன. அதனைக் குருபரம்பரையாக கற்று இன்று வரை நெறிமுறை தவறாது பாடங்களை நடத்தி வருகிறது கோவிலூர் திருமடம். எனவே கோவிலூர்த் திருமடம் தமிழ் வேதாந்த மரபினுடைய தாய் வீடாக யாவராலும் அங்கீகரிக்கப்பட்டுப் புகழ்பெற்று உள்ளது. இன்றும் பல்வேறு அமைப்புகளின் மூலமாக சத்சங்கங்களின் மூலமாகவும், சொற்பொழிவின் மூலமாகவும் பாடம் கேட்டல் (சிரவணம்), கற்றல் தொடர்ந்து கோவிலூர் மரபு வேதாந்தம் நன்கு நடைபெற்று ஆன்மீகப் பெருமக்களுக்கும் வேதாந்த ஆர்வலர்களுக்கும் (முமூட்சுக்களுக்கும்) பயன்பட்டு வருகின்றது. இந்த வேதாந்த தத்துவங்களை 16 பாடங்களாகப் பிரித்துப் பல்கலைக்கழகப் பாடமுறைபோல (University syllabus) தொடர்ந்து நடத்தி வருகின்றது. கோவிலூர் திருமடமும் இன்றைய கிளை அமைப்புக்களும் நடத்திவருகின்றன.

Koviloor Digital Library

கோவிலூர் மரபுவேதாந்தப் பாடத்திட்டபடி 16 நூல்கள் கற்பிக்கப்பட்டுவருகின்றன.

1. நாநாசீவவாதக்கட்டளை
2. கீதாசாரத் தாலாட்டு
3. சசிவன்னபோதம்
4. மகாராஜா துறவு
5. வைராக்கியசதகம்
6. வைராக்கியதீபம்
7. இலட்சணாவிருத்தி
8. வேதாந்த சூடாமணி
9. கைவல்லிய நவநீதம்
10. விவேக சூடாமணி
11. அஞ்ஞவதைப் பரணி
12. பஞ்சதசி
13. ஈசுவரகீதை
14. பிரம்மகீதை
15. பகவத் கீதை
16. ஞானவாசிட்டம் ஆகியவை ஆகும்.

மேற்கூறிய 16 நூல்களும் வடமொழி நூல்களில் இருந்து மொழிப்பெயர்க்கப்பட்டவையாக இல்லாமல், வடமொழியில் கூறியுள்ள அனைத்து தத்துவங்களையும் உள்வாங்கி மனதில் ஏற்றித் தமிழிலே, அழகான, எளிமையான தமிழ்ச் செய்யுள்களாக உருவாக்கப்பட்டவையாகும். முதல் நூல் மட்டும் சுலோக வடிவிலே உள்ளது.

மேற்கூறிய 16 நூல்களும் முறையாக கடந்த 400க்கும் மேற்பட்ட ஆண்டுகளாகக் கற்பிக்கப்பட்டு வந்துள்ளன. வரலாற்றுக் குறிப்பின்படி சிருங்கேரி சாரதாபீடம் - மகாசன்னிதானம் பாரதி தீர்த்த மகாசுவாமிகள் என்ற ஆச்சாரியாரிடம் முறையாக சிரவணம் செய்தும் வித்யாரண்ய மகா சந்நிதானங்கள் அவர்களிடம் முறையாகச் சிரவணம் செய்தும் வடமொழி நூல்களைக் கற்று உணர்ந்த பிரம்மஞானிகள் தமிழிலே எல்லாக் கருத்துக்களும் கொண்ட வேதாந்த நூல்களைப் படைத்தார்கள். இப்படிக் காலங்காலமாகக் குருபரம்பரையிலே கற்று வந்த ஞானஆச்சாரியார்கள் வழியிலே சிக்கலை அடுத்த

Koviloor Digital Library

(பொருள்வைத்தசேரி) புறவாச்சேரி என்று பொதுமக்களால் அழைக்கப்படுகின்ற கிராமத்தில் பிரம்மஞானி ஞான ஆச்சாரியார் உகந்தலிங்கசுவாமிகள் வாழ்ந்து வந்தார். அவர்கள் தன்னை நாடி வருகின்ற முமூட்சுக்களுக்கு வேதாந்த போதனை செய்து வந்தார்கள். பிரம்மஞானி ஸ்ரீமத் உகந்தலிங்க சுவாமிகள் நெசவுத் தொழிலாளர். நெசவுத் தொழிலின் மூலமாக வரும் வருமானத்தை மூன்று கூறுகளாகப் பிரித்து ஒரு கூறு குடும்பச் செலவிற்கும், ஒரு கூறு தொழில் அபி விருத்திக்கும் ஒரு கூறு வேதாந்த சிஷ்யர்களுக்கும் செலவு செய்து வந்த திருமகனார் ஆவார்.

நாகப்பட்டினத்திலும், சிக்கலிலும் காரைக்குடி கோவிலூரரர் வீட்டைச் சார்ந்த மெய்யப்பச் செட்டியார் என்பவர் வட்டித் தொழில் செய்து வாழ்ந்து வந்தார்கள். அவர்களுடைய திருமகனாக் முத்துராமலிங்கம் என்று அழைக்கப்பட்ட குழந்தை அவதரித்தார். தக்க பருவம் வந்தகாலத்தில் உகந்தலிங்க சுவாமிகளின் பெருமையைக் கேட்டு அறிந்து அவரிடம் வேதாந்தம் கற்கத் தொடங்கி முழுமையாகக் கற்றார்கள். அப்படிக் கற்று வருகின்ற காலங்களிலே குரு பத்தினி ஆகிய பெருமாட்டி "முத்துராமலிங்கம் உங்கள் ஊரிலே நிறைய மயில்களும் மயில் குஞ்சுகளும் உள்ளன எனக் கேள்விப்பட்டேன். நான் வளர்ப்பதற்காக இரண்டு மயில் குஞ்சுகளைப் பிடித்து வந்து தர வேண்டும்" என்று ஆணையிட அவ்வாணையை தலைமேற் கொண்டு கோவிலூர்க் கிராமத்திற்கு முத்துராமலிங்கம் வந்து சேர்ந்தார்.

குருபத்தினியின் ஆணைக்கு இணங்க மயில் குஞ்சுகளைப் பிடிக்க வந்த முத்துராமலிங்கம் கோவிலூரில் திருநெல்லை உடனாய கொற்றவாளீஸ்வரர் திருக்கோவில் சிதிலமடைந்து, ஓலைக் கூரையின் கீழே அம்மன் அமர்ந்திருப்பது கண்டு உள்ளம் வருந்தினார், நெகிழ்ந்தார். அத்திருக்கோவிலை செப்பனிட்டு கற்றளியாகக் கட்ட வேண்டும் என்று விரும்பினார். விருப்பம் வைராக்கியமாக மாறியது. எனினும் மற்ற கடமைகளாலே மனதில் கொண்ட அந்த வைராக்கியம் சில காலம் மறக்கப்பட்டுவிட்டது. அதனை நினைவுபடுத்த திருநெல்லை அம்மன் இளநங்கையாக உருக்கொண்டு

Koviloor Digital Library

முத்துராமலிங்கரின் அன்னையார் கோலம் இடுகின்ற நேரத்திலே பிரசனமாகி" என்ன ஆத்தா உன் மகன் எனக்கு நல்ல வீடுகட்டித் தருவதாகச் சொல்லி இருந்த கூரையையும் பிரித்துப் போட்டுவிட்டு போய்விட்டான். அவன் வந்தால் அவனுக்கு ஞாபகப்படுத்து" என்று சொல்லி மறைந்தார். முத்துராமலிங்கரின் அன்னைக்கு ஏதும் புரியவில்லை. முத்துராமலிங்கர் திரும்பி வந்தவுடன் "என்ன அப்பச்சி யாருக்கோ வீடுகட்டித் தருவதாக சொல்லி அவர்கள் இருந்த கூரையையும் பிரித்துப் போட்டுவிட்டாயாமே அந்தப் பெண் என்னிடம் வந்து உனக்கு ஞாபகப்படுத்தச் சொல்லிவிட்டுப் போனாள். அப்படி இருந்தால் உடனடியாக அவர்களுக்கு வீடுகட்டித் தரஏற்பாடுசெய்" என்றார்கள்.

திருநெல்லை அம்மனே பெண் உருக்கொண்டு தன் தாய்க்கு தரிசனம் கொடுத்துத் தன்னுடைய தவறைச் சுட்டிக் காட்டியதையும் உணர்ந்து மனம் வருந்தினார். தாய் செய்த புண்ணியத்தை மனதாலே உணர்ந்து பெருமைப்பட்டார். அன்னைக் கூறிய செய்தி கேட்டு தன்னுடைய தவறையும் தாம் செய்த கால தாமதத்தையும் எண்ணி மிக்க வருந்தி உடனடியாக கோவிலூர் திருநெல்லை அம்மன் திருக்கோவில் திருப்பணியை தொடங்குவது என்று தீர்மானித்தார். அதன் வண்ணம் காரைக்குடி சுற்றுவட்டார நகரத்தார் மற்றும் நாட்டார் எல்லோரிடமும் தன்னுடைய கோவில் திருப்பணி நோக்கத்தைக் கூறி நன்கொடை வசூலித்தார்.

1814ஆம் ஆண்டு திருநெல்லை உடனாய கொற்றவாளீஸ்வரர் திருக்கோவில் திருப்பணி இனிதே தொடங்கப்பட்டது. நன்கொடை சேரச் சேர அதற்குத் தகுந்தார் போல கோவில் திருப்பணிகளும் நடந்தன.

இந்த கால கட்டத்தில் கோவில் திருப்பணியை மேற்பார்வையிடவும், வேதாந்த நூல்களைத் தொடர்ந்து படிக்கவும் ஓர் இடம் வேண்டும் என்ற எண்ணம் எழுந்ததன் காரணமாக கோவிலூர் திருமடம் சிறிய அளவிலே கட்டப்பெற்று 1818ம் ஆண்டு தொடங்கப்பட்டது. கோவிலூர் திருமடத்தினுடைய முதல் குருமகா சன்னிதானமாக ஸ்ரீலஸ்ரீ முத்துராமலிங்க ஞான தேசிகர் அமர்ந்து வேதாந்த தத்துவங்களை கற்பிக்கத் தொடடங்கினார்.

Koviloor Digital Library

மேற்சொன்ன 16 நூல்களிலே 14 நூல்கள் ஆரம்பத்தில் இருந்து போதிக்கப்பட்டதாகவும், இலட்சணாவிருத்தி, பஞ்சதசி இரண்டு நூல்களும் பிற்காலம் - மூன்றாவது பட்டம் கருணாநிதி சுவாமிகள் காலத்திற்குப் பின் சேர்க்கப்பட்டதாக சொல்லப்படுகிறது.

இங்ஙனம் கோவிலூர்த் திருமடம் கடந்த 200 ஆண்டுகளாக பல்கலைக்கழகம் போல் போன்ற ஒழுங்கு முறையோடு வேதாந்தம் போதிக்கப்பட்டு வருகிறது. இத்திருமடத்தில் பல்லாயிரம் மாணவர்கள் வேதாந்த சிரவணம் செய்து சிறந்த வேதாந்திகளாக, வேதாந்த ஆச்சாரியர்களாக வளர்ந்திருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான மாணவர்கள் தங்களுக்கு பிடித்த ஏற்ற இடங்களில் மடங்களைத் தோற்றுவித்து வேதாந்த போதனை செய்து வந்திருக்கிறார்கள்.

கோவிலூர் மரபைச் சார்ந்த ஞானாச்சாரியார் ஸ்ரீமத் காசிகானந்த சுவாமிகள் 108 திருமடங்களை பட்டியலிட்டு இருக்கிறார். அதனை பெருமதிப்பிற்குரிய தமிழ் அறிஞர் சோமலெ அவர்கள் நம்முடைய 1978ம் ஆண்டு நடந்த கும்பாபிஷேக மலரிலே வெளியிட்டு இருக்கிறார்கள்.

இங்ஙனம் தமிழ் வேதாந்தம் பிறப்பதற்கும் வளர்வதற்கும் காரணமாக அமைந்த கோவிலூர் திருமடம் மக்களிடையே தமிழ் வேதாந்தத்தின் தாய் வீடாக கருதப்படுவதும், புகழப்படுவதும் இயல்பே ஆகும்.

Koviloor Digital Library

நூலாசிரியர் அறிமுகம்

இந்நூலை இயற்றியவர் தத்துவராய சுவாமிகள் என்னும் ஞானி ஆவார். இவர் இயற்றிய மோகவதைப் பரணியில் ஒரு பிரகரணமாகக் கூறப்பட்டுள்ளது இந்த நூல்.

இந்த நூல் தத்துவராய சுவாமிகளால் அவர்தம் ஞானாச்சாரியார் ஸ்ரீமத் சொரூபானந்த சுவாமிகளின் அறிவுரைப்படி இயற்றப்பட்டது. இவர் ஏற்கனவே திருவருட்கழல்மாலை, போற்றி மாலை, புகழ்ச்சி மாலை போன்ற சாத்திரங்களை இயற்றி உள்ளார். குருநாதர் "இவை யாவும் பண்டிதர்களுக்கு மட்டும் பயன்படும். அவர்களாலே தான் புரிந்துகொள்ள முடியும். மந்த அதிகாரிகளும் புரிந்துகொள்ளும் வகையில் ஒரு சாத்திரம் செய்து காட்டு என்றாராம்." குருவின் சொல்லை தலைமேற்கொண்டு 'ஸ்ரீ ஸீத ஸம்ஹிதை' சிவபெருமான் விஷ்ணுபகவானுக்குப் போதித்த முக்திக் கண்டத்தின் ஏழாவது அத்தியாயத்தில் ஞானிக்குப் பணிவிடை செய்வதன் மூலம் ஞானம் பெற்ற சசிவண்ணன் சரித்திரத்தை மிக எளிமையாக யாவரும் புரிந்து கொள்ளக் கூடிய விதமாக அமைத்து வேதாந்தக் கருத்துக்களை அடக்கியதாகச் செய்தார். அதனால் அவர் குருமகானும் மகிழ்வுற்றார்.

தத்துவராய சுவாமிகள் மகாஞானி. சிறந்த ஞானம் பெற்றவர். இவருடைய ஜீவ சமாதி எறும்பூரில் உள்ளது. சிதம்பரம் - விருத்தாசலம் சாலையில் சேத்தியாத் தோப்பு என்னும் கிராமத்திற்கு அருகில் உள்ளது, எறும்பூர் கிராமம். தத்துவராயருடைய ஜீவ சமாதியை ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சின்னாபின்னப்படுத்தி மறைத்து விட்டார்கள். மறைந்து கிடந்த சமாதி சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு சிதம்பரம் பொன்னம்பல சுவாமிகள் அவர்களுடைய தீவிர

Koviloor Digital Library

முயற்சியால் கண்டுபிடிக்கப்பட்டு சாமதிக்குத் திருக்கோயில் கட்டினார்கள். பிறகு கோவிலூர் ஆதீனம் எட்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீமத் சோமசுந்தர சுவாமிகள் காலத்தில் கல் திருப்பணியாகக் கட்டிக் கும்பாபிஷேகம் செய்து வைத்தார்கள். பின்னர் பன்னிரண்டாவது பட்டம் ஸ்ரீமத் நாச்சியப்ப சுவாமிகள் காலத்தில் அத் திருக்கோவிலைப் புதுப்பித்துக் கல் திருப்பணியாகவே திரும்பக் கட்டி - 2006 ஆண்டு கும்பாபிஷேகம் செய்து வைத்தார்கள்.

பின் குறிப்பு: (எறும்பூர் அதிஷ்டானக் கோவிலுக்கு அருகில் எறும்பூர் கோ.சித மடாலயம் கட்டி உள்ளார்கள். வருடந்தோறும் ஆடி மாதம் சதய நட்சத்திரத்தில் முறையாகக் குருபூஜை நடந்து வருகிறது. ஏராளமான பக்தர்கள் துறவிகள் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்.

சசிவண்ணனுடைய சமாதியும் அவருடைய சற்குருநாதர் நந்திபாராயணர் அதிஷ்டானத் திருக்கோவிலும் தத்துவராயர் கோவிலிருந்து விருத்தாச்சலம் செல்லும் பாதையில் இருபது கிலோமீட்டர் தொலைவில் கோபுரபுரம் என்னும் கிராமத்தில் சத்தியப்பர் ஆலயத்தில் உள்ளன.)

Koviloor Digital Library

சசிவன்ன போதம்

தத்துவராய சுவாமி அவர்கள் வரலாற்றையும் அவர்களுடைய அதிஷ்டானத் திருக்கோயிலைப் பற்றியும் அத்திருக்கோயில் அமையப்பெற்ற எறும்பூரைப் பற்றியும் அத்திருக்கோயிலைக்கட்டி பராமரித்துக் கால இடைவெளியின் படி புனருத்தாரணம், கும்பாபிஷேகம் ஆகியவற்றை செய்து வருகின்ற கோவிலூர்த் திருமடத்தைப் பற்றியும் இது வரை நாம் பார்த்தோம்.

தத்துவராய சுவாமிகள் நிறைந்த ஞானமும் பண்புடைய குருவிற்காக பலதிசைகளிலும் பலவருடங்கள் தேடி அலைந்து பின்னர் ஸ்ரீமத் சொரூபானந்த சுவாமிகளை மீண்டும் பார்த்து, பிரிந்து இருந்த காலத்திலே ஸ்ரீமத் சொரூபானந்த சுவாமிகள் பூரண ஞானம் பெற்றுத் திகழ்வதை அறிந்து அவரையே தம்முடைய குருவாக ஏற்றுக் கொண்டார். அவ்வாறு அரிதாகக் கிடைத்த குருவினுடைய அன்பையும் ஆசீர்வாதத்தையும் பெறுவதற்காக பல்லாற்றாலும் ஸ்ரீமத் தத்துவராய சுவாமிகள் மிகவும் முயன்றார். குருமகானுடைய மகிழ்ச்சிக்காக அவருடைய விருப்பத்திற்கு ஏற்ப பல அரிய நூல்களை இயற்றினார். அவை கீழே தரப்பட்டுள்ளன. அந்த நூல்களிலே அனைத்து வேதாந்தக் கருத்துக்களையும் பொதிந்து வைத்து வருங்காலச் சந்ததியினருக்குப் பெரிதும் பயன்தருமாறு செய்து வைத்தார்.

- அடங்கன் முறை
- பாடுதுறை
- பகவத்கீதா மான்மியம்
- மார்கழித் திங்கள் பாராயண மஞ்சரி
- திருப்பள்ளியெழுச்சி திருவெம்பாவை
- திருவடி மாலை
- கூர்ம புராணத்திலுள்ள ஈசுவர கீதை
- சிவகீதா (ஹிந்தி)
- கணேச கீதா (ஹிந்தி)

Koviloor Digital Library

- சசிவந்த போதம்
- அஞ்ஞவதைப்பரணி
- பிரம்ம கீதை
- மோகவதைப்பரணி
- சிவப்பிரகாசமென்னும் தத்வாமிர்தம்
- அமிர்தசாரம்
- ஸ்ரீதத்துவராய சுவாமிகள் பாடற்றிரட்டு
- திருத்தாலாட்டு
- கீதாத்திரயம்
- திருவடிமாலை திருவருட்கழகன்மாலை

அப்படி இயற்றப்பெற்ற நூல்களிலே நான்கு நூல்கள் கோவிலூர்த் திருமடத்தினுடைய வேதாந்த மரபின் பாடநூல்களாக கற்பிக்கப்படுகின்றன. அவையாவன சசிவன்ன போதம், அஞ்ஞவதைப்பரணி, ஈசுவர கீதை, பிரம்ம கீதை இவற்றில் முதல் நூலான சசிவன்ன போதம் கோவிலூர்த் திருமடத்தின் வேதாந்த மரபிலே மூன்றாவது நூலாகக் கற்பிக்கப்படுகிறது. இந்நூல் மோகவதைப்பரணி என்னும் நூலின் ஒரு பகுதியாக எழுதப்பட்டுள்ளது. விருத்தாசலபுராணம் என்னும் நூலிலே சூதஸம்ஹிதை என்னும் நூலின் ஒரு பகுதி உள்ளது. அதிலே சொல்லப்பட்ட சசிவன்னன் என்பவனுடைய கதையைச் சொல்வதே இந்நூல்.

தத்துவராய சுவாமிகள் அஞ்ஞவதைப்பரணி, மோகவதைப்பரணி என்று இரண்டு பரணி நூல்களை இயற்றியுள்ளார். வடமொழி, தமிழ் இருமொழி இலக்கியங்களில் அறிஞர்கள் கூறுவது வெஞ்சமரில் ஆயிரம் யானைகளைக் கொன்ற அரசனுக்கோ, வீரனுக்கோ பாராட்டி எழுதப்பட வேண்டிய இலக்கியம் பரணி என்பது மரபு. தத்துவரய சுவாமிகள் எம்முறையாலே பரணி நூல்களை இயற்றினார் என்பது சான்றோர்களின் ஐயம். பல்லாயிரக்கணக்கான மக்களின் (முமூட்சுகளின்) அஞ்ஞானத்தை கொன்றவை, இவ்விரு நூல்கள் என்பது வேதாந்திகளின் விளக்கம். இந்த சசிவன்ன போதம் மூன்று முக்கியக் குறிக்கோள்களைக் கொண்டு எழுதப்பெற்ற நூல்.

1. எப்படிப்பட்ட அஞ்ஞானியாக இருந்தாலும் ஒரு காலகட்டத்திலே தான் யார், நாம் எதற்காகப் பிறப்பிக்க

Koviloor Digital Library

பட்டுள்ளோம் என்று சிந்திக்கத் தொடங்குவானாகில் அவன் குருவின் அருளாலே அஞ்ஞானத்தை விட்டு விலகி ஞானபூமிக்குக் கண்டிப்பாக வரமுடியும் என்பதை முமுட்சுக்களுக்குத் தெரிவிப்பது.

2. எப்படிப்பட்ட பாவச்செயல்களை, கொடூரங்களை, அநியாயங்களை, அடுத்தவர்க்குத் தீங்குகளை செய்த மாபாவிகளுக்குக்கும் குருவின் அருள் கிடைக்கப் பெற்றால் ஞானவழி தோன்றும். அவ்வழி நடந்து பூரண ஞானம் பெற்று பரம்பொருளோடு ஐக்கியம் ஆவது சாத்தியமே.

3. குருவினுடைய பெருமையை விளக்கவும் அவருடைய அருட்பார்வை, தீட்சை, போதனை அனைத்தும் எப்படிப்பட்ட மகாபாவிக்கும் அஞ்ஞானத்தை நீக்கி ஞானவழி காண்பித்து விடுதலை அடையச் செய்யமுடியும் என்கின்ற குருவின் மேன்மையை யாவரும் அறியப் பறை சாற்றுவது.

இந்நூல் 115 கண்ணிகளாலே இயற்றப்பெற்ற அருமையான செய்திகளைக் கொண்ட எளிய தமிழ்ப் பாடல்களால் ஆன நூல். இந்த நூலிலே இரண்டு பாடல்கள் தொடக்கத்திலும் இறுதியிலும் குருவினுடைய மகிமையை மிக அழகாக, தெளிவாகப் பேசுகின்றன. (3 & 110).

Koviloor Digital Library

நூல் முன்னுரை

சசிவன்ன போதம் என்பது சசிவன்னன் என்கிற கொடூரன் ஞானம் பெற்ற கதையைக் கூறும் நூலாகும். சசி என்றால் வெண்மை, வன்னம் என்றால் நிறம், போதம் என்றால் ஞானம். பலவிதமான ஈனச் செல்களாலும் தீய நடவடிக்கைகளாலும் வெள்ளை நிறம் வரக்கூடிய பெருநோயைப் பெற்றவன். தான் சரனடைந்த ஞானியின் அருட்பார்வையாலும் (நயன தீட்சை) அவருடைய கரத்தால் தொட்டு ஆசீர்வதிக்கப் பெற்ற கருனையாலும் (ஸ்பரிச தீட்சை) அவரிடமிருந்து பெறப்பட்ட அருள்மொழிகளாலும், நெறிமுறைகளாலும் (உபதேச தீட்சை) தொடர்ந்து வழி நடந்து அவருக்கு உடல் பொருள் ஆவி அனைத்தாலும் சேவை செய்து நல்ல சீடனாக மாற்றம் பெற்று அவருடைய பூரண அருளைப் பெற்றதனாலே அஞ்ஞானம் விலகி ஞானம் பெற்று பரம்பொருளை உணர்ந்து, அனுஷ்டித்து, மோட்சம் பெற்ற கதை.

சாஸ்திரங்களின் மரபு பிறழாமல் முறைப்படி கடவுள் வாழ்த்து, நூலின் கருத்து, நூலின் பயன், நூல்களைப் படிப்பதனால், கேட்பதனால் ஏற்படும் அருள் இவற்றை முதலில் சொல்கின்றது. தமிழிலே இப்பகுதியை பாயிரம் என்று அழைப்பார்கள். பாயிரம், முறையாக கடவுள் வாழ்த்து அல்லது குருவாழ்த்து (நமஸ்கார மங்கலம்) சாஸ்திரம் சொல்லக்கூடிய கருத்துகளைக் கோடி காட்டுதல். (வஸ்து நிர்தேஷமங்கலம்) இந்த சாஸ்திரத்தை படிப்பதனால், கேட்பதனால் ஏற்படும் மேன்மை கூறல் (ஆசீர்வாத மங்கலம்) மற்றும் அவையடக்கம் ஆக நான்கு விஷயங்களை எடுத்துக்கூற வேண்டும்.

Koviloor Digital Library

கடவுள் வாழ்த்து

மதிபருதி எரிநீர்கால் வான்அவனி
இயமானான் வடிவாய் எல்லா
அதிபதியாய் அனைத்தும்ஆய் அல்லாத
அறிவுருவை அகத்துள் வைப்பாம்

சொல்லால்தம் மதிவிரகால் தூயதுஇது
தீயதுஇது என்னும் மாக்கள்
எல்லார்க்கும் அதுஅதுஆய் இறைஇருக்கும்
படியேயாய் இருக்க என்றே

இரண்டு பாடல்களும் தொடர் கவிகளாகும் (குளகம்) முதல் பாடலிலே சந்திரன், சூரியன், வானம், காற்று, அக்கினி, நீர், பூமி, ஜீவ ஆன்மா (ஜீவர்கள்) ஆகிய எட்டு விஷயங்கள் சேர்ந்த அஷ்டமங்கல மூர்த்தமாய் எங்கும்நிறைந்த, யாவற்றிற்கும் அதிபதியான ஞானவடிவை, பரம்பொருளை எப்போதும் மனத்துள் வைத்து வணங்குவாம்.

ஸ்ருதி, ஸ்மிருதி, புராணம், இதிகாசம், முன்னோர் கூறி இருக்கும் நூல்கள் அனைத்தும் கற்றுப் பெற்ற அறிவாலும் தங்களுடைய சுய அறிவின் திறத்தாலும் இவை நல்லவை, மற்றவை தீயவை, என்னும் விவேகம், ஜீவர்கள் எல்லோர்ருக்கும் அவரவர் பின்பற்றுகிற தத்துவங்கள், மதக் கருத்துகள், அவரவர் விருப்பப்படி அந்தந்த மதங்களாகவே இருக்கும் என்று அறிவோமாக.

கருத்து

மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு கண்ணிகள் மட்டுமே பாயிரமாக இந்நூலில் சொல்லபட்டுள்ளன. இந்த இரண்டு பாடல்களும் நமஸ்காரமங்கலம் - இறை வணக்கம். என்ற பகுதியில் அடங்கும்

Koviloor Digital Library

நூலின் தொடக்கத்திலே சந்திரன், சூரியன் என்று இயற்கைத் தெய்வங்களையும் ஐம்பூதங்களாகிய தேவதை களையும் ஜீவாத்மா என்ற பரம்பொருளின் சொரூபத்தையும் ஆகிய எட்டு மங்கலங்களையும் (அஷ்டமங்கலம்) வணங்கி அவற்றினுடைய அருளாலே இந்த நூல் எந்தவித விக்கினமுமின்றி நிறைவு பெற வேண்டும், முமூட்சுகளுக்கு பயண்தர வேண்டும் என்ற நல் எண்ணத்தோடு தொடங்குகிறார் தத்துவராய சுவாமிகள். நூலில் சொல்லப்படப் போகும் செய்திகள் வேதாந்தத் தத்துவங்களே என்பதனால் பரம்பொருளை வணங்குவது சரியான இலக்கிய மரபு.

Koviloor Digital Library

நூல் தொடக்கம்

தத்துவராய சுவாமிகள் மோகவதைப் பரணியின் அங்கம் ஆன சசிவன்ன போதம், அஞ்ஞவதைப்பரணி ஆகிய இரண்டு நூல்களிலும் அஞ்ஞானம் அகன்று ஞானத்தை உணர்வதைப் பற்றியே வலியுறுத்திச் சொல்கிறார். இரண்டு நூல்களிலும் அஞ்ஞானத்தைப் பேய்களாக (அலகைகளாக) உவமித்து அந்த அஞ்ஞானப் பேய்களை ஞான ஒளியாலே விரட்டுவதாகப் பேசுகிறார். முதல் ஐந்து பாடல்களும் (பேய்கள் காளிமாதாவிடம் முறையிட்டுப் புலம்பும் வார்த்தைகள்) எங்களுடைய பாவகாரியங்களாலே பேய்களாகப் பிறப்பெடுத்து ஆவிகளாக இருளிலே அலைகின்ற எங்களுக்கு விடிவுகாலம் பிறக்குமா? பரம்பொருள் அருள் சித்திக்குமா? அஞ்ஞானம் விலகி ஞானம் பெறும் வாய்ப்பு எங்களுக்கு கிட்டுமா? என்று எல்லாம் வல்ல காளிமாதாவின் திருவடிகள் பணிந்து அழுது புலம்பி வேண்டி நின்றன. அவைகளின் புலம்பலைக் கேட்டு கருணையே உருவான காளிமாதா எப்படிப்பட்ட பாவத்தைச் செய்திருந்தாலும் தவறை உணர்ந்து பரம்பொருளை நினைத்து, வருந்தி, இரந்து கேட்கில் மோட்சம் பெற முடியும். இதனை ஒரு வரலாற்றின் வழியே உங்களுக்குச் சொல்வேன் என்று தொடங்குகிறார்

1. **முடிவும் ஆதியும் அற்ற முழுமுதல்**
   வடிவமாகி வரும்படி எங்ஙனே?

2. **சொல்லு கோலமோ கருதி விருத்தமோ**
   அல்லவோ என அன்னை அருளுமே

3. **அருவன் ஆயினும் அன்பர்க்(கு) உருவனாய்**
   வருவன் என்பது மாமறை சொல்லுமே

4. **புத்தி யாம்வலை யில்படும் பார்மிசை**
   பத்தியாலறி யொண்ணாப் புராணனே

Koviloor Digital Library

5. **தேவி இப்படிக் கூறத் திருவருள்**
பாவி யேற்கு இலம் என்று பதைக்கவே.

தங்கள் வழிபடும் தெய்வமாகிய காளிமாதாவை வணங்கித் தங்கள் ஐயங்களைக் கேட்டனர். ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருள் ஒரு வடிவம் தாங்கி வருவது எதற்காக?

அவ்வடிவம் வேத இதிகாசங்களில் சொல்லப்பட்டவைக்கு அப்பாற்பட்டவையோ என்று அழுது புலம்பின. இதனைக் கேட்டுக் கருணையுடன் காளிமாதா அருள் சுரந்து சொல்லத் தொடங்கினாள்.

உருவமற்றவனாக பரம்பொருள் இருந்தாலும் அன்பர்களுக்கு உதவுவதற்காக ஓர் உருவம் தாங்கி வரும் என்பது வேதங்கள் சொல்கின்ற உண்மையாகும்.

பரம்பொருள் வசம் பக்தி கொன்டு அதனைப் பாடிப் பரவசம் அடைந்து திருவடிகளில் சரனடைந்தால் பரம்பொருள் நம்முடைய பக்தி வலையில் அகப்படும். உலகத்தில் உள்ளவர்கள் பரிபூரணமான பரம்பொருளை எக்காலும் அறிவால் அறிய இயலாது. ஆனாலும் தொடர் விசாரம் பரம்பொருளை நமக்கு உணர்த்தி நாம் அனுபவிக்கச் செய்து ஞானத்தைப் பெறச் செய்யும்.

காளிமாதா இவ்வாறு கூறவும் பேய்கள் பதறி அழுது எங்களைப் போன்ற பாவிகளுக்கு ஞானம் பெறுவதும் மோட்சம் அடைவதும் கிடைக்காமல் போய்விடுமோ என்று பதைத்து அழுதன.

6. **அலகை அச்சம் அறஅக வான்களும்**
உலகில் முத்தி பெறும்பரிசு ஓதுவாம்

இப்படி பதைபதைத்து அழுத அலகைகளுக்கு ஆறுதலாக எப்படிப்பட்ட பாவிகளும் முக்தி பெற இயலும் ஒரு வரலாறு மூலம் இதனை உங்களுக்கு விளக்குவேனாக என்று கூறி ஆறுதல் அளித்தாள்.

7. **புணர்ந்த பாவம் எலாம்பரி பூரணம்**
உணர்ந்த ஞானி விழிபட ஓடுமே.

Koviloor Digital Library

காலம் காலமாக பூவுலகில் பல கருமங்களைச் செய்து அதன் வழியாக சேர்த்து வைத்த பாவங்கள் எல்லாம் ஒரு உண்மையான பரிபூரண ஞானத்தை உணர்ந்து அனுபவித்த ஞானியின் அருட்பார்வை கிடைக்கப் பெற்றால், செய்த அத்தனை பாவங்களும் பறந்து ஓடிவிடும். மீண்டும் நம்மைச் சேராது. ஞானிகளுக்கு நான்கு குணங்கள் மிக முக்கியமாகும் என முன்னோர் நூல்களில் சொல்லப்பட்டுள்ளன. மைத்திரை, கருணை, முஜிதை, உபேட்சை. மைத்திரை என்பது எல்லா ஜீவன்களிடமும் நட்பு பாராட்டுவது தம் அன்பிற்கு உரியவர்களாக ஏற்றுக்கொள்வது. கருணை எல்லா ஜீவன்களிடமும் கருணையுடன் நடந்து கொள்வது அவர் தம் துன்பங்களை துயரங்களை தம்முடையதாகக் கொண்டு தீர்ப்பதற்கு உதவ முயல்வது உதவிகளைச் செய்வது. முஜிதை எல்லா ஜீவர்களிடத்தில் அவர்தம் நற்கருமங்களை கண்டு மகிழ்வது பாராட்டுவது. உபேட்சை எல்லா ஜீவர்களிடத்தும் விருப்பமும் அன்பும் கொண்டு வாழ்தல்.

8. எழிலாரும் ஞானி புகழ் என்னை கூற
உயர்வீடு இவன்சொல் வழிசெய்
தொழிலாளர் சேர்க்கை அதுகேளும் முன்னை
இதிகாசம் ஒன்று சொலவே

எப்படிப்பட்ட ஞானியின் அருட்பார்வை கிட்டினால் பாவம் போகும் என்று கேட்பீரானால் ஞானியினுடைய பெருமையை, மேன்மையை எவ்வாறு கூற இயலும். ஞானி என்பவர் கருணை, பக்தி, வைராக்கியம், பிரம்ம ஞானம் அனைத்தும் சேர்ந்த நல்லவர். மாசு மருவற்றவர் மூவகைத் துன்பங்களைக் (தாபங்கள்) கடந்து பரம்பொருளின் சொரூபமாகத் திகழ்பவரே பிரம்ம ஞானி என்று கருதப்படுவார்.

மூவகைத் துன்பங்கள்: - அத்யான்மிகம் - வாத - பித்த - சிலேத்தும ஏற்றத்தாழ்வினால் உடலில் ஏற்படும் பலவகையான நோய்களின் துன்பங்கள். ஆதிபௌதிகம் - பிற உயிர்களாலாவது, திருடன், பாம்பு, தேள் முதலிய உயிர்களால் வருகின்ற துன்பங்கள். ஆதி தெய்வீகம் - பூகம்பம், புயல், இடி, மின்னல், மழை முதலிய துன்பங்கள் மூன்றும் தூல உடலை தாக்குபவை.

Koviloor Digital Library

9. தம்தாபம் அற்றப ரன்ஏவல் செய்த
அவன்உற்ற பேறுதனை முன்
செந்தாம ரைக்கண்மு தல்வர்க்கும் எம் அண்ணல்
திருவாய் மலர்ந்த்து இதுவே.

அப்படிப்பட்ட பிரம்மஞானிக்கு மனம், வாக்கு, காயத்தால் அடிபணிந்து நால்வகைச் சேவைகளையும் செய்து அவருடைய அன்பைப் பெற்ற ஒரு சீடனுடைய வரலாற்றை செந்தாமரைக் கண்ணனாகிய திருமாலுக்கு, முக்கண்கள் உடைய பெற்ற பரமசிவன் திருவாய் மலர்ந்து கூறிய கதை இதுவே.

நால்வகை சேவைகள், ஆப்தம், அங்கம், ஸ்தாணம், சிரத்தை ஆகும். ஆப்தம் என்பது குருமகானுக்கு மனதிற்கு பிடித்தவற்றை செய்தல். குருவினுடைய சில ஆசைகள் சாதாரண நெறிமுறைகளுக்குச் சற்றே அப்பாற்பட்டவையாகக் கூட இருக்கலாம். இருப்பினும் அவர் விருப்பத்தை பூரணமாக திருப்தி செய்வது சீடனுடைய கடமையாகும். உதாரணமாக சிலகுருமார்களுக்கு வினோதமான அற்பப் பொருள்மீது விருப்பம் இருக்கலாம் அப்படி இருந்தாலும் அவற்றை பூர்த்தி செய்ய வேண்டும். கோவிலூர் மரபு வேதாந்தியான மகாஞானி பொன்னம்பல சுவாமிகளுக்கு மசால்வடை என்று அழைக்கப்படும் பருப்பு வடையிலே விருப்பம் அதிகமாம் அதனை அவருடய சீடர்கள் வாங்கி வந்து அவர் உண்டு களிக்கப் பார்த்து மகிழ்ந்திருக்கிறார்கள். திருவாரூர் மடப்புரம் தட்சிணாமூர்த்தி மடத்தின் குருமகா சந்நிதானமாக வீற்றிருந்து அதன் பின்னர் சிதம்பரம் கோ.சித.மத்தை தொடங்கிய காரணத்தால் இன்றும் அவருடைய குருபூஜை தட்சிணாமூர்த்தி மடத்திலே சிறப்பாக நடத்துகிறார்கள் பருப்பு வடைகள் தவறாமல் படைக்கப் படுகின்றன். இதே போல குருமகானுடைய விருப்பங்களை நிறைவேற்ற வேண்டும்.

அங்கம் என்பது குருமகானுடைய உடலுக்குச் செய்கின்ற சேவை. அவர் உடல் நலத்தைப் பாதுகாப்பது, கைகால் பிடித்து விடுவது அவருடைய ஆடைகளைத் துவைப்பது போன்ற சேவைகள் அங்கம் என்ற வகையில் சேர்க்கப்படும்.

Koviloor Digital Library

ஸ்தாணம் என்பது குருமகானுக்குரிய சொத்துக்கள் - நிலம், பயிர், ஆஸ்ரமம், ஆடு, மாடு ஆகியவற்றைப் பாதுகாப்பது, அவற்றைப் பயன் தரும் வகையில் வளர்ப்பது ஆகியவை ஆகும்.

சிரத்தை என்பது குருமகான் போதிக்கின்ற காலத்தும் சாதாரணமாக உரையாடும் காலத்தும் அவருடைய சொற்களை, கருத்துக்களை பொன்னெனப் போற்றுவதும் சாட்சாத் ஈசனுடைய வார்த்தைகளாகக் கருதி ஏற்று, ஒப்புக் கொண்டு பணிவுடன் பின்பற்றுவதும் ஆகும்.

10. உவமிப்பின் ஞானிவி ழிபட்டு முன்னை
வினைவிட்டு முத்தி உலகில்
தவமற்ற வெய்யவி நையேபு ரிந்த
சசிவன்னன் எய்து கதையே.

ஈடு இணையற்ற பிரம்மஞானி ஒருவரின் (நயன தீட்சை) விழியின் ஒளி பட்டு, அருள் பெற்று, பல பிறப்புகளில் செய்த பிழைகள் அனைத்தும், சேர்த்து வைத்த பாவங்கள் எல்லாம் பறந்து ஓட நிர்மலமாகி முக்தி பெற்ற சசிவன்னன் என்பவனுடைய கதையே இது.

11. ஏமம் புகுவார் உளபா தகராம்
யாவர்க் குளும்மிக் கவன்ஆ கும் இவன்
நாமம் புகல்வார் குலமும் எரிவாய்
நரகம் புகுமா றுநடந் தன்னே.

சசிவன்னன் என்பது வெள்ளை நிறத்தவன் என்பது ஆகும். இவன் தன் வாழ்நாளிலே செய்யக்கூடாத அனைத்துப் பாவங்களையும் கொடூரச் செயல்களையும் செய்தவன். கொலை, கொள்ளை, பிறன் மனை நாடுதல் பலரையும் அலட்சியம் செய்தல் பெற்றோரை அவமதித்தல் பொருள் வளமும் இளமையும் தந்த அற்பப் பலத்தால் அனைவரையும் துன்புறுத்தி மகிழ்தல் இப்படிப்பட்ட அளவிலாப் பாவங்களைச் செய்த காரணத்தால் இக்கயவன் பெயரைச் சொன்னாலே நரகத்தில் விழக்கூடிய பாவம் கிட்டும்.

Koviloor Digital Library

12. மலம்மே வியதீ வினையின் வலியால்
மகிழ்உம் பர்பதத் திலிருந் தஇவன்
குலம்மே வியதென் புலவா ணர்களும்
கொடிதுஆம் நரகம் குடி ஏறினரே.

மும்மலம் கூடிய கொடூரச் செயல்களினாலும் அவன் பெற்ற பாவங்களினால் சொர்க்கலோகப் பிராப்தி அடைந்திருந்த அவன் முன்னோர்கள் நரகக் குழியில் தள்ளப்பட்டு துன்புற்றார்கள். இங்ஙனம் பல தலைமுறைகளைச் சேர்ந்த புண்ணியவான்களும் இவனுடைய பாவச் செயல்களினாலே நரகத்தில் குடியேற வேண்டிய கட்டாயம் ஏற்ப்பபட்டது

13. மிகமே வியபுண் ணியபா வம்எனும்
வினையின் பயன்மேல் ஒருகா லம்உறாது
இகமே வரும்என் பதனால் உளநோய்
எல்லாம் இவனைச் செறஎய் தினவே.

இப்படிப்பட்ட பாவங்களைச் செய்த தினால் அடுத்தப் பிறப்பில் தான் துயரம் நிகழும் என்பது இல்லாமல் அவனுடைய இந்தப் பிறப்பிலேயே துயரங்களை அனுபவிக்க நேரிட்டது. தீச்செயல்களால் தீராத வியாதியைப் பெற்று துன்பம் அனுபவித்தான், வெள்ளை நிறத்தவன் ஆனான்.

14. தன்புத் திரநே யம்விடா மையினால்
தவறுஉற் றஇவன் பெறுதந் தைஉளம்
துன்புற்று இனிஎன் னைகொலோ புதல்வன்
துயர்தீர் வகையென் றுசுழன் றனனே.

இந்தபாவி எத்தனை பாவங்களைச் செய்திருந்தாலும் புத்திர பாசம் என்னும் பந்தத்தால் கட்டுண்ட இவன் தந்தை (பாகயஞ்ஞன்) தன்மகன் இவ்வறு துயர் உறுவதைக் கானச் சகிக்காமல் துயரத்தில் உழன்றான்.

15. ஒன்றா லும்வினைத் துயர்துய்ப் பதுஅலால்
ஒழிவிக் கும் உபா யம்உனக்கு இலதே
என்றா லும்அறிந்த வன்அன் புவிடாது
இவனைக் கொடுஉழன் றனன்எங் கணுமே.

Koviloor Digital Library

வினையின் பயனை அனுபவித்தே தீரவேண்டும் என்ற நியாயம் சசிவன்னன் தந்தைக்கு தெரிந்திருந்தாலும் புத்திர பாசத்தை விட்டொழிக்க இயலாத தந்தை இவனை ஒரு கூடையில் எந்தி நாலா திசைகளிலும் இவனுடைய பாவம் தீர வழி கிடைக்காதா என்று அலைந்து திரிந்தார்.

16. ஒருமா தவன்மற்று இவன்வே தனைகண்டு
ஒழிவற்று உளஒன் றைஉளத்து உணரும்
பரம்ஆ கியஞானிகள் கண் உறலே
பரமஅ விழ்தம்என் றுபகர்ந் தனனே

இப்படி அலைந்து திரிகின்ற காலத்திலே நல்ல மனத்தை உடைய, மாதவங்கள் செய்த ஒரு புண்ணியவான் தந்தையினுடைய வேதனையைக் கண்டு இரங்கி "முற்றும் துறந்த பிரம்மஞானியினுடைய அருட்பார்வையும் கருணையும் கிட்டினால் இவனுடைய நோய்" தீரும் என்று உரைத்தார்.

இப்படிப்பட்ட ஒரு மாதவன் கண்ணிலே படுவதற்கு சசிவன்னனுக்குப் பரம்பொருளின் அருள் கூட்டி வைத்தது சசிவன்னனின் தந்தை அந்த மாதவனைக் கண்டு பரம்பொருளின் தூதுவனாகவே கருதி மகிழ்ந்தான். பரம்பொருள் செய்யும் உதவிகள் யாவும் ஒரு ஜீவாத்மா மூலமாகத்தான் செய்தலாகும் என்பது இதன் வழி அறியலாம்.

17. தான்அந் தம்இலா ததனைத் தருவான்
சத்தீச் சுரம்என் னும்இடம் தனில்வாழ்
மாநந் திபரா யணர்என் பவர்நின்
மைந்தற்கு உறுநோய்க் குமருந்து எனவே.

அப்படி பரம்பொருளைப் போன்று ஆசீர்வாதம் நல்கிய அந்த மாதவன் "என்றைக்கும் அழிவில்லாத ஞானத்தை அருளக்கூடிய மகான் ஒருவர், சத்தீஸ்வரம் என்னும் இடத்தில் வாழ்கின்றார் அவர் பெயர் நந்திபராயணர். அவருடைய அருள் பார்வை உன்மகனுக்கு கிட்டுமேயானால் குற்றநோய், பெருநோய் அனைத்தும் ஓடிவிடும் உன் மைந்தர்க்கு அவருடைய உபதேசமே மருந்து."

Koviloor Digital Library

18. முடியா உபதேசம் இதுஎன்று அவனும்
முனிவன் பதம்எய் திமொழிந் தனன்இக்
கொடியான் வெருவா துகுயிற் றியநோய்
கூற்றக்கு அரிதா யகொடுந் தொழிலே.

இந்த அருள் வார்த்தை கேட்ட சசிவன்னன் தந்தை பாகயஞ்ஞன் இந்த உபதேசம் முடிவில்லாத ஈஸ்வரன் வாக்கே என நம்பினான்.. அதன்படி நந்திபராயணரை அடைந்து முனிவருடைய பாதம் பணிந்து வணங்கி உரைத்தான். "இங்கே நிற்கின்ற கொடிய நோயை உடைய கொடியவன் பலபல கொடூரங்களை பாவங்களைச் செய்தவன் அவை உங்கள் திருச் சன்னதியில் உரைத்தற்கு இயலாத பாவங்களாகும்".

19. ஈங்கு உன் திருமுன் பகரும்படியோ
இவன் எய் தியதீ வினைஎன் னஎலாம்
நீங்கும் படிதன் அனுபூ தியினால்
நிகழும் விழிவைத் தனன்நின் மலனே.

முனிபுங்கவரே உம்முடைய மகாசன்னதியில் இவன் செய்த கொடூரங்களையோ பாவங்களையோ சொல்வதும் இவன் அடைந்த தீவினைகளையையும் கொண்ட நோய்களையும் கூறுதல் முறை ஆகாது என்றான். மகாமுனிவர் தன்னுடைய கூர்மையான நயனங்களால் இவனை உற்று நோக்கி இவனுடைய பாவங்களும் நோய்களும் தீரத் தன்னுடைய அனுபூதியினால் பார்த்தார்.

20. கணியா தபவக் கடுவா னதிருக்
கண்வைத் தலும்விட் டனகா துகடும்
பிணியா வையும்நல் லபிதா இறைதான்
பேணிப் பணிஎன் று பெயர்ந் தனனே.

கணக்கிலாத பாவங்கள் செய்து பிறருக்கு சொல்லொனாத கொடுமைகளைச் செய்து அடைந்த வினைகள் நந்திபராயணர் திருக்கண் பார்வை பட்டதும் யாவும் விட்டு விலகின. மீண்டும் அனுகாது ஓடின. கடும் நோய்களும் அகன்றன கண்டு குற்றம் ஏதும் புரியாத நல்ல தந்தையான பாகயஞ்ஞன் முனிபுங்கவருடைய திருவடி

Koviloor Digital Library

பணிந்து பின் சசிவன்னனை நோக்கி "இந்த இறைவனுடைய தாள் பணிந்து சேவை செய்வாய்" என்று கூறித் திரும்பிப் போனார்.

21. இடனே முதலாக உவந்து இறையோன்
ஏவும் பணிசெய்து இவனும் சிலநாள்
உடனே இவனே திருமே னிதனக்கு
உரியான் எனஉற் றனன் உம்பனொடே.

குருபரனுடன் தனித்து விடப்பட்ட சசிவன்னன் தன்னுடைய அனைத்து நோய்களும் குருபரனுடைய விழியின் தீட்சன்யத்தாலே விலகி விட்டது என்பதைத் தெள்ளத் தெளிய உணர்ந்து குருமகானே தனக்கு அடைக்கலம் தரக் கூடியவர், ஞானம் புகட்டக் கூடியவர் என்பதை உணர்ந்து அவர் திருமலர்ப் பாதங்களை பூரணமாகச் சரனடைந்தான். குருமகானுடைய இருப்பிடமே தன் இடமாகவும் அவரை இறைவனாகவும் கருதி அவர் இட்ட பணிகளைத் தலை மேல் தாங்கி அர்ப்பணிப்புடன் செய்து வந்தான். இப்படி சில காலம் செய்து வந்த குரு சேவையின் பயனாக அவருடைய திருமேனித் தொண்டு செய்வதற்கு இவனே உரியவன் என்று அனைவராலும் பாரட்டப் பெற்றான்.

22. நன்றாய் முனிதாள் வழிபாடு அதனால்
நாநா விதமா னபிறப் பினைவிட்டு
ஒன்றுஆ கியவீடு உணர்உத் தமர்கட்கு
உளசா தனம்நா லும்உதித் தனவே.

இவ்வண்ணம் சிலகாலம் முனிவர் திருமலர்ப் பாதம் பணிந்து, இறைவனாகக் கருதி வழிபட்டு நால் விதமான சேவைகளையும் செய்து வந்தான். அதன் பயனாக பிறப்பு இறப்பினைத் துறந்து முக்தி அடைவதற்கு உரிய வழிகாட்டியாக்க் கருதப்படும் நால்வகைச் சாதனங்களும் இவனிடம் வந்து சேர்ந்தன. விவேகம், வைராக்கியம், சமாதி சட்க சம்பத்து, முமுட்சுத்துவம் ஆகியவை மோட்சத்திற்குரிய நான்கு சாதனங்களாகும்..

1. விவேகம் என்பது நல்லவை / தீயவை, நிலையானவை / நிலையற்றவை, பயன் உள்ளவை / பயன் இல்லாதவை என எல்லா விஷயங்களையும் பகுத்து அறிந்து

Koviloor Digital Library

நல்லவற்றை கடைப் பிடிப்பதே விவேகம். வேதாந்தத் தத்துவத்திலே நிரந்தரமான, பூரணமான, எங்கும் நிறைந்த பரம்பொருள் ஒன்றே நிலையானது என்று உணர்வதே விவேகம்.

2. வைராக்கியம் என்பது தான் ஏற்றுக் கொண்ட நல்ல கடமைகளை முடித்தே தீருவேன் என்ற எண்ணம் வைராக்கியம். வேதாந்தத் தத்துவத்திலே இகபர சுகங்களை வெறுத்து ஒதுக்கி அவையெல்லாம் தேவையற்றவை அனான்ம வஸ்துகள், ஆன்மவஸ்துவே பரம்பொருள் எனக் கருதி, உணர வேண்டிய வஸ்து என்று அறிந்து அதனை அடைவதையே குறிக்கோளாகக் கொள்வதே வைராக்கியம்.

3. சமாதி சட்க சம்பத்து ஞானம் தவத்தின் வழியாக சமாதி நிலை பெற்று ஜீவபிரம்ம ஐக்கியத்தை உணர்வதே சமாதி. இதற்கு ஆறு வகை சாதனங்கள்.

அ. **சமம்** - அந்தக்கரண ஆதிக்கத்தை கட்டுப் படுத்துதல்

ஆ. **தமம்** - புலன்களை அடக்குதல்

இ **விடல்** - விடப்பட்ட, ஒதுக்கப்பட்ட விஷயங் களையும் அவை தொடர்பான சகல கர்மங்களையும் விட்டு ஒதுங்குதல்

ஈ. **சகித்தல்** - பிராரர்த்த கர்மத்தால் தோன்றும் இரட்டைகளை - வெப்பம் / குளிர், இருள் / ஒளி, விருப்பு / வெறுப்பு, சுகம் / துக்கம் ஆகியவற்றை சமமாகக் கருதுதல்.

உ. **சமாதானம்** - தன்னுடைய இலட்சியத்தில் பரம்பொருளை உணர்வதே வாழ்வின் குறிக்கோள் என்று ஏகமனதாய் ஏகாக்கிரமாய் இருத்தல்.

ஊ. **சிரத்தை** - ஸ்ருதி, ஸ்மிருதி, சற்குரு வாக்கியங்களை பரம்பொருளின் சொற்களாகக் கருதி நம்பிக்கை கொண்டிருத்தல்.

4. முமூட்சுத்துவம் பரம்பொருளை உணர்ந்து ஜீவன் முக்தி அடைய வேண்டும், பிரம்மத்துடன் ஐக்கியம்

Koviloor Digital Library

ஆகவேண்டும் என்ற ஆர்வம் தோன்றி வளர்ந்து, அடக்க முடியாத பேரார்வமாக தோன்றுவது முமூட்சுத்துவம். ஆடையிலே தீப்பற்றியவன் எவ்வளவு வேகமாக நீர்நிலை அடைய வேண்டும் என்று ஓடுவானோ அதைப் போல பரம்பொருளை உணரவேண்டும் அனுபவிக்க வேண்டும் என்றும் தீராத ஆர்வம் கொள்வதே முமூட்சுத்துவம் எனப்படும்.

இந்நான்கு சாதனங்களும் முழுமையாகப் பெற்றிருந்தால் ஒழிய பரம்பொருளை உணர்வதும் அனுபவிப்பதும் இயலாத செயலாகும் எனவே தான் சாதனம் இன்றி சாதனை இல்லை என்று கூறப்படுகிறது.

23. முனிவன் திருமுன்பு உளதன் குறைதான்
மொழிவன் சிலஅஞ் சலிகுஞ் சியதாய்ப்
பனிவந்து இருகண் கள்பதங் களிலே
பலகால் வலம்வந் துபணிந் தனனே.

சசிவன்னன் குருபரன் அருளாலே நால்வகைச் சாதனம் கைவரப் பெற்றாலும் தன்னுடைய குறைகளை முற்றிலுமாக அறிந்தவன் எனவே முனிவர் திருப்பாதம் பணிந்து இரு கண்களிலும் நீர் சொரிய குருபரனை பலமுறை வலம் வந்து பணிந்து தன்னுடைய குறைபாடுகளை எடுத்துரைக்கத் தொடங்கினான்.

24. அருளே வடிவா கியமா முனிதான்
அறியா தவர்போ லஅழுங் கல்உறும்
பொருள்ஏது எனமைந் தன்நடுங் கினன்இப்
பொல்லா தபவப் புணரிக்கு எனவே.

சசிவன்னன் கூறியதைக் கேட்க குருபரன் ஏதும் அறியாதவர் போல் கலங்கி அழுவதற்கு காரணம் என்ன என்று கேட்டார் சீடனாகிய சசிவன்னன் பிறப்பு இறப்பாகிய பவக்கடலுக்கு அஞ்சி அழுகின்றேன் என்று கூறினான்.

25. வெருவும் பிறவிக் கடல்வித் தரம்முன்
வேதா கமகீ தைவிளம் பும்அதைக்
குருவும் தனதுஅன் பன் மனத்து அளவில்
கொளுமா றுதொகுத்து இவைகூ றிடுமே.

Koviloor Digital Library

அச்சத்தைத் தரக்கூடிய பிறவிக்கடலின் தன்மையையும் கொடுமையையும் அதனைக் கடப்பதற்கு தோணிகளாக உள்ள சாதனங்கள் வேதம், ஆகம்ம், ஸ்ருதிகள் (கீதை, உபநிஷத், பிரம்ம சூத்திரம் ஆகிய முதன்மையான நூல்கள்) யாவற்றையும் சீடனுக்கு அவன் மனதிலே பதியுமாறு சொல்லத் தொடங்கினார்.

நந்தி பராயணரின் உபதேச மொழிகள்

26. மரண பவங்க ளான புனலை உடையது
மதியை விழுங்கு காம அரவு பெரியது
கரண ஒழுங்கு அறாது விடய இரைநுகர்
கணமொடு இயங்கும் மீனம் மிகவும் உகள்வதே.

27. பெருமிதம் என்று கூறு பெருமை உடையது
பிணிகள் எனும்கெ டாத புலவு கமல்வது
வரும்இடர் இன்ப மான திரைகள் பொருவது
மனம்எனும் வஞ்ச ராச மகரம் உறைவதே.

28. அளவில் அகந்தை ஆமை அபரி மிதம் உளது
அவாவு நிறைந்த ஆழம் அறிய அரியது
களவு நெருங்கு பாரும் மலையும் உடையது
கலக விடங்கள் மேவு கிருமி நெளிவதே.

29. துகள்எனும் நன்குஅ லாத நுரைகள் தருவது
துறவுஎனும் இன்பம் ஆன கரையை விடஅகல்
மகளிர் எனும்த வாத வலிய கழியது
மறலியும் அஞ்சு கோப வடவீ எரிவதே.

30. வெருவரு கின்ற போக முதலை உடையது
விவிதம் அனந்தம் ஆன துறையும் அறிபவர்
ஒருவர்க டந்து போக விரகில் எழுபவ
உததிவி ளம்ப யாவர் உலகில் அறிஞரே.

அடுத்து வரும் பாடல்கள் அனைத்தும் பூரணமாக பரம்பொருளைப் பற்றிய கருத்துக்களை, தத்துவங்களை மிக எளிய முறையில் பாமரர்களும் மந்த அதிகாரிகளும் புரிந்து கடைப்பிடிக்க்க் கூடிய வகையில் தத்துவராய சுவாமிகள் சொல்லியிருக்கிறார். வேதாந்தத் தத்துவம் முழுமையையும் கருத்து அனைத்தையும் சாறு பிழிந்து மாணவர்களுக்கு எளிதில் செறிக்கும் வண்ணம் பழச்சாறாகக் கொடுக்கிறார்.

Koviloor Digital Library

பிறப்பு இறப்பு எனக் கரைகளை உடைய ஆழமான பவக்கடல் நீந்துவதற்கு அரியது. பிறப்பு இறப்பு என்ற பாவங்களை நீராகக் கொண்டவை. அறிவை முழுமையாக விழுங்கி துயரங்களை ஆழ்த்தக் கூடிய ஆசை என்ற மிகப் பெரிய பாம்பை உடையது. கரணங்களை - ஞானேந்திரியம், கர்மேந்திரிய அந்தக்கரணம் என்று பல்லாயிரக் கணக்கான மீன்களை உடையது விஷத்திற்கு ஒப்பான விடய சுகங்களை எப்பொழுதும் உற்பத்தி செய்து கொண்டே அலையும் கடலே குடும்ப சாகரம் என்பது.

சம்சார சாகரத்தை அலையாடும் கடலுக்கும் அளக்கமுடியாத ஆழிக்கும் ஒப்பிட்டு பல தத்துவங்களை புரிய வைக்கிறார்.

சம்சார பந்தத்தாலே கட்டுப்பட்டுள்ள யாவரும் அந்தக்கரணங்கள், இந்திரியங்கள் ஆகியவைகளால் பல துன்பங்களை அடைகிறார்கள்.

மனமென்னும் அந்தக்கரணம் இந்திரியங்கள் உதவி கொண்டு பல விதமான விருப்பங்களை ஆசைகளை உற்பத்தி செய்கின்றன. தூண்டி விடுகின்றன. இந்த தூண்டுதல்களாலே சம்சாரி பலவிதமான கருமங்களைச் செய்து ஆசைகளை திருப்தி செய்யவும் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் முயல்கிறார். ஆனால் ஆசைகள் தீர்வதில்லை, தேவைகள் நிறைவடைவதில்லை. நிறைவேறுகின்ற அனைத்து ஆசைகளிலும் சில குறைபாடுகள் மனதில் பதிந்து விடுகின்றன. அத்துடன் கர்மங்களைச் செய்கின்ற பொழுது உடல் உழைப்பும் பலவித சோதனைகளும் எதிர் வருகின்றன இவற்றால் மனம் பெரும் துண்பத்தை அடைகின்றது. எந்த ஜீவனும் பூரணமாக ஆசைகளை நிறைவேற்றி விட்டேன் என்று திருப்தி அடைவதில்லை ஒன்றை அடைந்தால் மற்றொன்று தொடர்ந்து வரும் வகையான ஆசைகளை உருவாக்கி ஜீவர்களை அலைக்கழிக்கும் அந்தக்கரண இந்திரியங்களை கடலில் உள்ள மீன்களுக்கு ஒப்பிடுகிறார். அகங்காரம் என்ற அந்தக்கரணம் சாதாரண பொருளாதார (உலகாயத) அறிவையே ஞானம் என்று கர்வம் கொண்டு அலைகின்றது. இந்த அந்தக்கரணத்தால் பலதுன்பங்கள்

Koviloor Digital Library

துயரங்கள் ஏற்பட்டு மனம் நாற்றத்தால் பாதிக்கப்பட்டு மாமிசம், செத்த மீன்கள் போன்று ஆகின்றது எப்பொழுதும் தொடர்ந்து மாறிமாறி வருகின்ற இன்ப துண்பங்களை கடல் அலைகளுக்கு ஒப்பிடுகிறார். ஆமை புகுந்த வீடும் அமீனா புகுந்த வீடும் உருப்படாது என்ற முதுமொழிக்கு இனங்க அகந்தையை ஆமையாக உவமிக்கிறார். அதுவும் அதிக அளவிலே உள்ளதாக உவமிக்கிறார். சம்சார சாகரத்திலே எதிர்பார்த்து வரும் துண்பங்கள் சந்தோஷங்கள் தவிர எதிர்பாராத வகையில் பல துண்பங்கள் சோக நிகழ்வுகள் நிகழவும் அவற்றையெல்லாம் கடல் அடியில் மறைந்து காணப்படும் குன்றுகளுக்கும், பள்ளங்களுக்கும், கட்டாந்தரைகளுக்கும் ஒப்பிடுகிறார். ஜீவன் செலுத்தும் படகு தெரியாமல் குன்றுகளிலும் கட்டாந்தரைகளிலும் மோதினால் அழிந்து போகும். அது போல ஆசை அதன் விருப்புகள் ஆகியவை சீடனை அழிக்கக் கூடியவை. சம்சார பந்தத்தால் நல்ல பயனே தராத பலவிதமான விகற்பங்கள் - பிறப்பு, வளர்ச்சி, இளமை (யௌவனம்) நரை திரை மூப்பு நோய் நொடி பிறப்பு ஏற்படலாம் பெண்களால் ஏற்படும் (ஆண்களால் ஏற்படும்) ஆசாபாசங்கள் தப்பிக்க முடியாத வன்மையான சூழல், விடுதலை அளிக்கக் கூடிய துறவறம் என்னும் கரையை அடைய விடாத பந்த பாசங்கள் என்கிறார். எமனையும் அஞ்சவைக்கக் கூடிய தீக்கனல் போன்ற கோபங்கள், ஆகியவை அனைத்தும் கடலில் தோன்றும் நுரைகளுக்கு ஒப்பானவை. ஜீவன் விரும்புகின்ற மோகத்தை முதலைக்கு ஒப்பிடுகிறார். ஆசாபாசங்கள் ஆறாத சினம், அடங்காத அகந்தை யாவையும் சீறிவருகின்ற முதலைக்கு ஒப்பாகும் என்று உரைக்கிறார். நால்வித தர்மங்களையும் முன்னோர் சொல்லிய நெறிமுறைகளையும் நன்கு அறிந்தவர் என்று எண்ணப்படுகின்ற பெரியவர்களால் கூட பிறவிக் கடலைக் கடக்க முடிவதில்லை. ஜீவனாகப் படைக்கப்பட்டவர்கள் பவக்கடலைக் கடந்து கரையேற வழி சொல்லத் தக்க அறிஞர் யாரும் உளரோ? இல்லை.

31. பொறிவழி சென்று மீளும் அவலம திகொடு
பொருசம யங்கள் ஆறும் மறியவி மும்அதில்
அறிவுஅழிவு ஒன்றுஇ லாதபொ ருள்எது என உள
அனுபவ வங்கம் ஏறும் அறிஞர் அகல்வரே.

Koviloor Digital Library

ஞானேந்திரியங்கள் கர்மேந்திரியங்கள் வழியாக செயல் படுகின்ற மதி கொண்டு பரம்பொருளை பலவித சமயங்களாக பிரித்துக் கொண்டு ஒன்றுக்கொன்று போரிடுவது அறிவில்லாத செயல், அது சமயவாதிகரம். ஒருவருக்கொருவர் வாதம் செய்வது வேண்டாத காரியம் என்றைக்கும் அழிவில்லாத பொருள் எது என அறிந்து அப்படிப்பட்ட பொருளை, ஞானத்தை அனுபவமாக உடைய ஞானிகள் கரை சேர்வர்.

32. புணரி கடந்து போக விரகுஇல் எனமொழி
பொழுது புலம்பி ஆவி புதல்வன் இறும்முனம்
உணர்வுஎ னும்வங்கம் ஏறும் அறிஞர் அகல்வர்என்று
உரையை வழங்கி நாதன் உவகை அருளவே.

முனிபுங்கவர் இது வரை உபதேசித்த அருள் மொழிகளைக் கேட்டு சசிவன்னன் எனக்கு கடல் கடந்து போகும் வலிமை கிடையாதே என்று புலம்பி அழுக "ஞானம் என்னும் கப்பலில் ஏறிச் செல்லும் ஞானிகளால் கடக்க முடியும்" என்று அறிவுரை தந்தார் இதனைக் கேட்டு தனக்கும் ஞானம் பெறவும் பவக்கடல் கடக்கவும் இயலும் என்று எண்ணி மகிழ்வடைந்தான்.

33. வாழிஎன இறைவன்அடி தொழுதுவரு பவமாம்
ஆழியினை அகலும்அறிவு அருளுகஎன அவரே.

குருபகவானே நீடூழி வாழ்க என்று அடி பணிந்து வணங்கி எனக்கு ஏற்படக்கூடிய பிறப்பு இறப்பு (ஆழியை) என்ற மிக ஆழமான கடல் பகுதியைக் கடப்பதற்கு ஞானத்தை அளித்து அருள்வீராக என்று வேண்டி நின்றான்.

34. பரஅறிவும் அபரஅறிவும் எனவும்இரு பரிசாத்
திரஅறிவை அறியும்அவர் மொழிவர்தெளிவு உறவே.

அறிவு என்பது இரு வகைபடும். பர அறிவு, அபர அறிவு. அபர அறிவு என்பது உலகாயத அறிவை கூறுகிறது. பொருள், காட்சி, உயிர்கள், பருவநிலை, பொருளாதாரம், நிர்வாகம் போன்றவற்றை தெரிந்து கொள்வது அபர அறிவு ஆகும். பர அறிவு என்பது ஏக அறிவு, இரண்டற்ற பூரணமான பரம்பொருளைப் பற்றிய அறிவு. முன்னவை அனான்ம அறிவு. மற்றது ஆன்ம அறிவு பர அறிவை

Koviloor Digital Library

நிறைவாகக் கொண்ட குருமகான் சீடனுக்கு திடமான பர அறிவை புரியும் படி உரைக்கத் தொடங்கினார்.

35. அபரஉணர்வு அருமறைகள் முதல்அகில கலையும்
உபரமது அறஉதவும் உணர்வுபர உணர்வே.

அபர அறிவு என்பது அனைத்துப் பொருள்களின் அறிவு, விஷய புத்தி, வேதங்கள், புராணங்கள் அனைத்துக் கலைகள் ஆகியவற்றைப் பற்றிய அறிவு பர அறிவாகும். இவற்றின் பந்தத்தை தீர்ப்பதற்கும் சம்சார பந்தம் அகல்வதற்கும் உதவும் ஞானம் பர அறிவு ஆகும்.

36. ஆகமவி தங்கள்அறி வார்அபரம் அறிவார்
யோகமொடு உறங்கும்அவ ரேபரம் உணர்ந்தோர்.

வேத ஆகமங்கள், 64 வகைக் கலைகள், இலக்கியங்கள் அனைத்தையும் கற்று உணர்பவர்கள் அபரஞானம் உடையவராவர் தியானத்தில், தவத்தின் யோகத்தின் மூலமாக சமாதி நிலை அடைந்து பரம்பொருளை உணர முயற்சிக்கும் பெரியவர்களே, ஞானிகளே, பரஞானம் அடைந்தோர்.

37. புராணம்இதி காசம்எவை யும்பொருள் அனைத்தின்
பிராணனறி யாதுள இடத்துஇவை பிதற்றே.

புராணம், இதிகாசம், இலக்கியம், இசை எல்லாப் பொருளும் அடைந்திருந்தாலும் பரம்பொருள் பற்றி அறியாதவர் அறிவு வீணேயாகும் அவர் கூறும் மொழிகள் பிதற்றலே ஆகும்.

38. இயல்அறிவது இசைஅறிவது இனம்அறிவது உளவாம்
அயல்அறிவது அறிவதுஅல அறிவுஅறிவது அறிவே.

இயல், இசை, நாடகம் என மொழிகளின் இனங்களை அறிவது அபர அறிவு ஆகும் உலகாயதத்திற்குத் தான் பயன்படும். தன்னுடைய உண்மையான ஆன்ம சொரூபத்தை உணர முயல்வதே உண்மை அறிவு, பர அறிவு ஆகும்.

39. நவிலுகலை அறுபத்து நாலும் அறிவாரும்
பவலயம்அது அறுசுத்த பரமம்அறி யாரே.

64 கலைகளை ஐய்யம் திரிபரக் கற்றுப் புலமை பெற்றோர் பிறப்பு இறப்பு இல்லாத நிரந்தரமான பரம் பொருளை அறியாதவர்கள் ஆவார்கள்.

Koviloor Digital Library

40. ஆகஅறி வாளர்இவைய னைத்தும்
ஏகஅறி வாளர்இவை யாவும்அறி யாரே.

உடல் பற்றிய அறிவை உடையவர்கள் தன்னையே, தன் உடலே தான் என்ற எண்ணம் உடையவர்கள், பல கலைகளைக் கற்றுத் தேர்ந்து வல்லவர்களாகப் பிரகாசிக்கலாம் பரம்பொருள் பற்றி அறிய மாட்டார் ஆனால் பரம்பொருள் ஒன்றையே ஏகாக்கிரமாக தான் பரம் பொருளின் சொரூபமே என்று உணரும் அறிவே பயனுள்ள அறிவு. பரஞானம் பெற்ற ஞானிகளுக்கு மற்ற கலைகளை கற்று அறிய வேண்டிய அவசியமில்லை.

41. ஐயறிவு அறிந்துஅவை அடங்கின வரேனும்
மெய்யறிவுஇ லாதவர்கள் வீடது பெறாரே.

ஐம்புலன்களைப் பற்றி முழுமையாக அறிந்து அவற்றின் செயல்பாடுகளை உணர்ந்து அதுசெய்யும் நன்மை தீமைகளையும் பகுத்து அறிய வல்லர்கள் ஆனாலும் அவற்றை அடக்கி ஆளக் கற்றவர்கள் ஆனாலும் உலகாயத வாழ்க்கையிலே நல்லவர்களாக வாழலாமே தவிர பரம்பொருளை உணர்ந்து அனுபவிக்க வழிகாட்டும் பர அறிவு இல்லாதவர்களே ஆவார்கள். இப்பொருளை வலியுறுத்தி திருவள்ளுவர் கூறுவது ஒப்பு நோக்கத் தக்கது.

ஐயுணர்வு எய்தியக் கண்ணும், பயம்இன்றே (பயன்)
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு. குறள் : 354

மேலும் திருமந்திரம் 1758ஆம் பாடலும் 2339ஆம் பாடலும் இதே கருத்தினைக் கூறும்.

ஒன்று எனக் கண்டேன்எம் ஈசன் ஒருவனை
நன்று என்று அடியிணை நான் அவனைத் தொழ
வென்ற ஐம்புலனும் மிகக் கிடந்து இன்புற
அன்று என்று அருள்செய்யும் ஆதிபிரானே.

திருமந்திரம் : 1758

என்னை அறிந்திலேன் இத்தனை காலமும்
என்னை அறிந்தபின், ஏதும் அறிந்திலேன்
என்னை அறிந்திட்டு இருத்தலும் கைவிடாது
என்னை இட்டு, என்னை உசாவுகின்றேனே.

திருமந்திரம் : 2339

Koviloor Digital Library

**42. மெய்ம்மைஅறிவு அல்லதமில் வேறுஅறிவது எல்லாம்
தம்மைஅறி யும்அறிவ தேஅறிவு தானே.**

என்றும் அழியாத பரம்பொருளை அறிவது மெய் அறிவு ஆகும். மற்றவை எல்லாம் பயனற்றவை ஆகும். தம்மைத் தாம் அறிந்து கொள்வதே தான் பிரம்மத்தின் சொரூபம் என்று அறிவதே ஞானமாகும்.

**43. பூசனையும் அதுசகல பொருளும்அறி தமையும்
ஈசனையும் வேறதுஅற அறிவதுஅறிவு எனவே.**

கடவுளை பலபல பொருள்கள் கொண்டு - பூ, கனி, காய், வாசனைத் திரவியங்கள் ஆகியவை - அபிஷேகம் செய்து இறைவனுக்கு படைத்து ஈசனை வணங்குதல். ஆனால் நம்மால் படைக்கப்பட்ட பொருள்களும் ஈசனும் வேறு வேறு அல்ல யாவும் பிரம்ம சொரூபமே என்று அறிவதே ஞானம்.

**44. தான்எனும்உ டம்பதுத னைத்தவிர வேறுஆய்
யான்எனும் அருத்தம்உள வோஅருளுக எனவே.**

நான் என்று சொல்லப்படுகின்ற உடம்பினைத் தவிர வேறு எப்பொருளும் நான் அறியேன் உடம்பினைத் தவிர வேறு எப்பொருளுக்காகவது நான் என்ற பெயர் உண்டோ என்ற சந்தேகத்தை சசிவன்னன் குருமகானிடம் வின்னப்பித்தான்.

**45. எனதுஆடை பொன்பூம கன்தையல் பாய்மா
இபங்கண்மு கம்கால்கை மெய்என்ன என்றும்
தனதுஆய் உரைப்பான்வ குத்துஇந்த ஊனைத்
தான்என்று அயர்த்தும்சொ லத்தக்கது அன்றே.**

சசிவன்னனுக்கு குருமகான் உரைத்த பதில் "எனது என்பது எனது ஆடை, செல்வம், மனைவி, மக்கள், ஆடு, மாடு, குதிரை என்னுடைய யானை என்றும் நான் என்பது என்னுடைய கை, கால், முகம், கண், மூக்கு, காது ஆகிய எல்லாம் என்னுடையவை, நானே என்று நினைத்தால் நான் என்பது எந்த உடல் உறுப்பு எனது என்பது எந்தச் செல்வம் என்று பல ஐய்யங்கள் தோன்றுவதால் நான் என்பது உடல் இல்லை சொத்து சுகங்கள் இல்லை" என்பதை புரிந்து கொள்வாயாக.

Koviloor Digital Library

46. தாள்ஆக ஊர்ஆழி யார்வென்னில் வீனா
தண்டுஆக வன்மார்பு தட்டுஆக மொட்டா
நாளாம்ம லர்ச் சென்னி கூந்தல்கொ டித்தேர்
நாள்நாளும் ஊர்வானில் வேறுஆக நாடே.

மேலே கூறிய தத்துவத்தினை விளக்க நந்திபராயணர் உடலை ஒரு தேருக்கு ஒப்பிட்டுக் காட்டுகிறார். நம்மை நடத்திச் செல்லும் பாதங்களே தேர்ச் சக்கரங்கள், நம்முடைய பரந்த மார்பு எஜமானர் அமரக்கூடிய ஆசனம், நம்முடைய முதுகெலும்பு சக்கரங்களை இணைக்கும் கம்பி (அச்சு), ஐம்புலன்கள் ஐந்து குதிரைகள் மனம் என்பது கடிவாளம், புத்தி ஓட்டுகிற தேர்ப்பாகன், நம்முடைய சிரம் தேரின் உச்சி ஸ்தூபி என்று ஒப்பிடுகிறார். எஜமானன் தேரில் அமர்ந்து பயணிக்கிறார். தேர் வேறு எஜமானன் வேறு என்பது போல நம் உடல் வேறு ஆன்மா வேறு.

47. கடக்குஞ்ச ரம்பண்ணி உள்நின்று ஒருத்தன்
கைபாதம் கன்னங்கள் மெய்போல் இயக்கும்
கிடக்கும்ந டத்தாஇ டத்துஇவ் வுடம்பும்
கிடக்கும்ஒ ருத்தன்ந டத்தா இடத்தே.

மூங்கில்கள், துணியாலும் பஞ்சாலும் யானை, குதிரை போன்ற பொம்மைகளைச் செய்து அவற்றை ஒரு பொம்மலாட்டக்காரன் தன்னுடைய உடல் திறமையாலும், கலைத் திறமையாலும் ஆடவைக்கின்றான். ஆட்டம் முடிந்ததும் கழற்றிப் போட்ட பின் பொம்மைகள் வெறும் பஞ்சுப் பொதிகளாகக் கிடக்கின்றன. இதே போல் நம்முடைய உடலும் எக்காலமும் ஆன்மாவினால் இயக்கப் படுகிறது. ஆன்மா இல்லையேல் இயக்கமும் இல்லை உடலும் சடலமே.

48. ஒருகூறு மலமாகும் ஒருகூறு உடம்பாகும்
ஒருகூறு மனமாகும் உண்டுஅற்ற அன்னம்
இருகூறு நீஆகின் ஒருகூறும் நீஆம்
இழிக்கும்ம லம்சோறு இடப்பட்ட உடலே.

நாம் உண்கின்ற உணவு பல கூறுகளாகப் பிரிந்து உடல் உறுப்புகளாகவும் கரணங்களாகவும் மலமாகவும் பிரிகின்றன. (ஒரு கூறு மலம், இன்னொரு கூறு மனம், மற்றும் ஒரு கூறு

Koviloor Digital Library

இந்திரியங்கள்) அப்படி இருக்கும் பொழுது உடல் நான் என்றால் நான் என்பது உறுப்புக்களா அந்தக்கரணங்களா இல்லை மலஜலமா? எதுவும் நான் இல்லை என்பதனால் நான் என்பது ஆன்மசொரூபமே.

49. கிளர்ஆத ரத்துஉண்ணும் அன்னம்சு டக்கை
கிட்டப்பொ றாதேஇ ருந்தார்மு னிந்தார்
தளராது உறுப்புஒன்றும் உயிர்போக அன்றே
தழல்பள்ளி மீதேது யின்றார்ச கித்தே.

நல்ல பசியோடு உணவின் வாசனை கொடுத்த ஆர்வத்தோடும்ச் சோற்றில் கைவைத்தபின் கடும் சூடு கண்டு அலறி யோசியாது சூடாக உணவைப் படைத்த மனையாளை கோபித்துக் கொள்கிறான். இந்தச் சூட்டையே தாங்கமுடியாமல் தவிக்கின்ற ஜீவன் ஆன்மா பிரிந்ததும் உடலை தீப்படுக்கையிலே கிடத்தி தீயினால் எரிக்கின்ற பொழுது எந்த உணர்வும் இன்றிக் கிடக்கிறது ஜடம். இதனைப் பகுத்துப் பார்ப்பாயாகில் உன் உடல் "நீ" ஆக மாட்டாய் என்பது புரியும்.

50. நிழல்பாவை கண்ணாடி யில்பாவை கைகால்
நிமிர்க்கும்மு டக்கும்இ வன்செய்யும் எல்லாம்
தொழிற்பால வாம்மற்றுஇவ் உடலம்செய் தொழிலும்
சுடர்ஞான வடிவான வன்செய்த தொழிலே.

மேற்கூறிய பாடல்களிலும் கூறப்போகும் சில பாடல்களிலும் மனித உடம்பு பஞ்ச கோசங்களால் ஆனது. அவை அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோன்மய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம். அன்னத்தாலே வளர்கின்ற தூலதேகம் அன்னமய கோசம் என்றும் (நுட்பமாகச் செயல் படுகின்ற உள் உறை உடம்பு சூட்சும தேகம் என்று அழைக்கப்படும் சூட்சும தேகத்தில் பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம் ஆகியவை அடங்கும்) மனோமய கோசம் என்பது மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கு அந்தக் கரணங்களாலும் ஞானேந்திரியங்களாலும் நடத்தப்படுகின்ற கோசம் ஆகும். பிராணமய கோசம் என்பது சுவாசம், உசுவாசம் என அனைத்து வாயுக்களின் செயல்கள் ஆகும். விஞ்ஞானமய கோசம் என்பது புத்தி என்கிற அந்தக்

Koviloor Digital Library

கரணத்தைக் கொண்டு மனத்தால் தெரிவிக்கப்பட்ட விஷயங்களை பகுத்து அறிந்து தராதரத்தை நிச்சயிப்பது விஞ்ஞானமய கோசம். ஆனந்தமய கோசம் என்பது தூல சூட்சும தேகங்களைத் தாண்டி அரூபமாகவும் உணர்ச்சி பூர்வமாகவும் இருக்கக் கூடிய ஆனந்தமே வடிவாகக் கொண்ட காரண தேகம் ஆகும் எனவே தேகம் என்பது "நான்" என்பது இல்லை ஆன்மாவும் இல்லை. ஆனந்தமய கோசம் காரண தேகத்தைச் சாரும் இப்படி ஐந்து கோசங்களாக பேதப்படக் கூடிய உடல் எவ்வாறு ஆன்மாவாகும், "நான்" ஆகும்.

51. அறிகின்ற பொருள்என்றும் அறிவானில் வேறே
ஆனால்இவ் வூன்ஆக நான்என்ன லாமோ
செறிகின்ற புள்அல்ல வேகூட இவ் வகையே
செடமான உடல்நின்னில் வேறுஎன்று தெளியே.

சூரிய ஒளியாலே தெரியப்படும் நம்முடைய நிழலும் கண்ணாடி முன் நிற்கும் பொழுது தெரிகின்ற உருவமும் நம்முடைய பிரதி பிம்பமே ஒழிய "நான்" இல்லை. நிழல் உருவமோ கண்ணாடியில் தெரியும் உருவமோ நாம் எதைச் செய்கிறோமோ - கைகளை ஆட்டுதல், குனிதல், நிமிர்தல் போன்ற -அச்செயல்களை அங்ஙனமே பிரதிபலிக்கும். இதைப் போலவே நம்முடைய அன்றாடச் செய்ல்பாடுகளும் ஞானசூரியன் அருளாலே கண்ணாடி பிம்பம் போல நிழல் பிம்பம் போல நடிக்கின்றது என்பதைப் புரிந்து கொள்வாயாக.

52. நிலம் ஆகும் வற்புஎன்ற நெகிழ்கின்ற நீர்ஆம்
நெருப்புஆம்இ தில்சுட்ட எல்லாமும் அநிலம்
சலம்ஆன புரையான வான்இந்த உடலம்
சடமான ஐம்பூத உருவங்கள் தாமே.

நம்முடைய தேகம் என்பது கை, கால், மூக்கு, கண் என்று பல பகுதிகளாக உள்ளவை மேலும் நம்முடைய ஐம்புலன்களாலே அறியப்படக் கூடியவை. இப்படிப்பட்ட பல பாகங்களைக் கொண்டது ஆன்மாவாக முடியாது. ஆன்மா என்பது அறியப்படக் கூடிய பொருள் இல்லை அறிபவனிடம் அறியப்படும் பொருளும் அறியும் அறிவிலும் வேறுபட்டதே. ஆன்மா இதற்கு உதாரணம் பறவைக்

Koviloor Digital Library

கூண்டு என்று சொல்கிறார். கூண்டும் ஆன்மா இல்லை, பறவையும் ஆன்மா இல்லை. அதே போல் தேகமும் ஆன்மா இல்லை, தேகத்தில் இருக்கின்ற உறுப்புக்களும், உயிரும் ஆன்மா இல்லை, பஞ்ச கோசங்களும் ஆன்மா இல்லை. அடுத்து வருகின்ற சில பாடல்களில் நம்முடைய உடல் ஐம்பூதங்களால் ஆனவை என்பதைத் தெள்ளத் தெளிவாக விளக்குகிறார். கடினத் தன்மை உடைய நிலம், நெகிழ்கின்ற தன்மையுடைய நீர், வெப்பத் தன்மையுடைய நெருப்பு, சலனத் தன்மையுடைய காற்று எல்லாவற்றையும் அடக்கிக் கொள்கின்ற வியாபகத் தன்மையுடையவை வானம் ஆகியவை இந்த உடலை உருவாக்கிய கருவிகளாகும்.

53. விழியைப்பு மான்என்னில் ரவிஆதி யாலே
விளங்குகின்றது அல்லால்வி ளங்காமை யாலே
ஒழியப்ப டும்கன்னம் முதல் நாலும் உன்றன்
உருக்கண்ட கண்தன்னை ஒப்பாக உள்ளே.

ஒரு மனிதனுடைய விழியில் காட்சிகள் (சட்சு - கண்) காணப்படுகிறது என்றால் அந்தக் காட்சிக்கு ஆதாரம் சூரிய ஒளி அல்லது அக்கினியின் ஒளி ஆகும். மேற்கூறிய புற ஒளிகளின் துனை இல்லாமல் புறக் காட்சியைக் காண முடியாது. அதே போல மற்றைய நான்கு புலன்களாகிய மெய், வாய், மூக்கு, செவி (துவக்கு, சிங்குவை, சிராணம், சுரோத்திரம்) ஆகியவையும் பிற கருவிகளின் உதவியின்றி (முறையில்) செயல் படாது. எனவே இவற்றில் எதுவும் "நான்" இல்லை.

54. அழல்உண்பொருள் களில்உண்பவை முக்கூறுஅதின் முதல்கூறு
அணிஎன்புந டுக்கூறுஅது மச்சைக்குஅணி ஆகும்
எழில்கொண்டக டைக்கூறுஅது வாக்குஆய்எழும் என்றே
இயல்நான்மறை அந்தங்கள்இ சைக்கின்றன வாமே.

நம்முடைய தேகம் எப்பொழுதும் சற்று உஷ்ணமாகவே இருக்கும். நாம் உண்ணும் உணவு, பருகும் நீர் ஆகிய யாவும் வயிற்றில் உள்ள ஜடராக்கினியால் வெந்து ஜீரனிக்கப்படும். அப்படி ஜீரனிக்கப்படும் உணவு மூன்று கூறாகப் பிரியும் முதற்கூறு கடினமான எலும்புகளை உருவாக்கப் பயன்படும், அடுத்த கூறு தசைகளை, நரம்புகளை உருவாக்கப்

Koviloor Digital Library

பயன்படும். மூன்றாவது கூறு நன்மை தரக் கூடிய பேச்சாக வடிவெடுக்கும். (புலன்களின் கூறுகளாக மூன்றாவது கூறு உருவாகும்) எண்ணிப் பார்க்கில் எலும்பும் சதையும் ஆன்மா ஆக மாட்டாது. "நீ" ஆக மாட்டாய் அதே போல ஐம்புலச் செயல்களும் ஆன்மா ஆகாது.

55. உண்ணும்புனல் முக்கூறுஅதில் முதல்கூறுஉவர் நீராம்
உதிரம்நடு வில்கூறுக டைக்கூறுபி ராணன்
எண்ணும்இ தில் இருகூறுஅவை நீஆயிடின் அன்றோ
இறுகின்றபி ராணன்அது நீயாகுவை இசையே.

உணவைப் போலவே பருகும் நீரும் மூன்று கூறுகளாகப் பிரியும். முதல் கூறு சிறுநீராக, கழிவு நீராக சென்றுவிடும். இரண்டாவது கூறு ரத்தமாக உருவெடுக்கும். மூன்றாவது கூறு பிராணன் ஆகும். முதல் இரண்டு கூறுகளும் - சிறுநீரும் ரத்தமும் எங்ஙனம் "நீ" ஆக மாட்டாயோ அப்படியே அழிகின்ற பிராணனும் "நீ" ஆக மாட்டாய்.

56. பிராணனும் அல்லதுஞ்சில் உணர்வுஇன்மை யால் அஃது
உணரும்பு லன்கள் ஒழிவால்
பிராணன்அது என்னின்மன்னை ஒழியாது சேனை
நகர்சூழ்வ லம்செய் பொழுதே.

நாம் தூங்கும் பொழுது பிராணனைத் தவிர மற்றைய இந்திரியங்கள், அந்தக்கரணங்கள் ஏதும் செயல்படுவதில்லை. பிராணன் மட்டும் ஏன் செயல்படுகிறது என்றால் ஒரு வேந்தன் இரவில் நகர்வலம் வருகின்ற பொழுது வீரர்கள் உடன் வராமல் மெய்க்காப்பாளர் ஒருவர் மட்டுமே உடன் வருவது போல ஜீவன் உறங்கும் நேரத்திலும் மெய்க்காப்பாளனாக பிராணன் உடன் வருகிறது, இயங்குகிறது.

57. கரணம்ஒ டுங்கவாயு நிகழ்வுஎன்கொல் என்னின்
உடல்காவல் ஆகும் அலதேல்
மரணம் அடைந்த்துஎன்று தமர்சுட்டி டாமுன்
வளைவாலின் ஞாளி கொளுமே.

சுழுத்தி அவஸ்தையில் எல்லா இந்திரியங்களும் கரணங்களும் ஒடுங்கிச் செயல்படாது இருக்கும் காலம் பிராணன் மட்டும் இயங்குவது ஏன் எனில் ஜீவர்களின் உடலுக்கு காவல் பிராணன், இயக்கம் நின்று விட்டால்

Koviloor Digital Library

மரணம் அடைந்து விட்டது என்று உடலைச் சடலமாகச் சிதையில் ஏற்றி விடுவார்கள் உறவினர்கள். எனவே பிராணன் எந்நிலையிலும் எக்காலத்தும் இயங்க வேண்டியது அவசியம்.

58. இனம்உற எண்ணவுள்ள கரணத்தில் ஒன்றுஇது
எனலால் இதுஎன்னது எனலால்
மனம்முனம் அன்னம்என்ற அதனாலும் அல்ல
மதிஅல்ல அந்த வகையே.

அந்தக்கரணங்கள் பற்றி விளக்கத் தொடங்குகின்றார். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் இவை நான்கும் அந்தக்கரணங்கள், உள் இருந்து இயக்கும் கருவிகள். அந்த அந்தக்கரணங்களிலே மனம் என்பதும் ஒன்றாகும் "ஜீவர்கள்" என் மனம் என்று சொந்தம் கொண்டாடுவதாலும் உண்ணும் அன்னத்திலிருந்து உருவாகும் ஒரு பாகம் என்பது முன்பே சொல்லி இருக்கிறார். மனமும் மலமும் "நான்" அல்ல என்று முன்னம் சொல்லி இருக்கிறோம் எனவே மனம் ஆன்மா அல்ல. அதே போல் புத்தியும் ஆன்மா அல்ல என்று உணர்வாயாக.

59. இடர்இன்பு உளதாய் நிலையற்று அறிவற்று
எண்ணும் கரணங் களில்ஆய் எவரும்
அடரும் பிறவிக்கு அடிஎன்று உணரும்
அகங்கா ரமும்நீ அலஎன்று அறியே.

ஜீவர்கள் வாழ்வில் இன்பமும் துன்பமும் உள்ளன. அவை நிலையற்றதாக அறியப்படுகிறது. சம்சார பந்தத்திலே பயணிக்கின்ற காலத்திலே தொடர்ந்து வரும் இன்பம் நிரந்தரமான சந்தோஷமாக இருக்க முடியாது. இன்பமும் துன்பமும் மாறி மாறித் தான் நிகழும். பிறவிக்கு காரணமாக அமைகின்ற அகங்காரமும் ஆராய்ந்து பார்த்தால் அதுவும் ஆன்மா இல்லை. அகங்காரமும் ஒரே மாதிரி நிலைத்து இருப்பது இல்லை. காலந்தோறும் கூடியும் குறைந்தும், இருந்தும் மறைந்தும், செயல்படுவதால் அகங்காரமும் ஆன்மா அல்ல.

60. ஐயப் படல்ஓர் பொருள்நிச் சயமாய்
அறியப் படல்யான் எனதுஎன் றுமதம்
செய்யப் படல்செய் வதுசிந் தனையாம்
சித்தம் அதுஅன்று எனநீ தெளியே.

Koviloor Digital Library

சித்தம் என்பது ஒரு விஷயம் (பொருள்) பற்றி ஐயம் அடைவதும் தொடர்ந்து விசாரித்து உணர்வது சித்தத்தின் வேலையாகும். செயல்பட வேண்டிய செயல்களைப் பகுத்து ஆய்ந்து முடிவெடுப்பதும் திட்டமிடுவதும் சித்தமே ஆகும். அவ்வாறு ஒரு பொருள் அல்லது செயல் கருமம் இவற்றிலே அபிமானம் கொண்டு கருமங்களைச் செய்யத் தூண்டுவது சித்தம். எனவே அதுவும் ஆன்மா அல்ல.

61. முன்ஆ கஉடம்பு அதுசித் தம்அதே
முடிவாக மொழிந்த பொருள்தி ரள்தான்
நின்ஆ கிலநீ அறியும் பொருளாய்
நிகழ்கின் றதனால் எனநின் மலனே.

உடல் உறுப்புகள் அனைத்தும் பற்றி சிந்தித்தால் அந்தக்கரணங்கள் சித்தம் தெளிந்து இவை அனைத்தும் உன்னாலே அறியப் படக்கூடிய விஷயங்கள் ஆகும் இந்த ஏழும் "நீ" அல்ல ஆன்மா அல்ல உன்னால் அறியப் படக்கூடிய பொருள்கள் ஆன்மாவாக இருக்க முடியாது. மேலே சொன்ன எதுவும் "நீ" அல்ல என்று நந்திபராயணர் சசிவன்னனுக்கு உரைத்தார். (காரிய உபாதிகள் - தேகம், இந்திரியங்கள், பிராணன், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆக ஏழு) இவையாவும் "நான்" அல்ல. ஆன்மா அல்ல.

62. உன்னால் அறியப் படும்யா வையும்உன்
உருவன்று எனஓ தினைஒக் கும்எனக்கு
என்னால் அறியாது ஒழியும் பொருளோ
யான்ஆ குவதுஎன் றலுமே.

சசிவன்னன் குருநாதருடைய உபதேசங்களைக் கேட்டு தன்னால் கிரகித்துக் கொள்ள இயலாதவற்றை குருவிடம் விளக்கிக் கூறுமாறு வேண்டுகிறான். குருமகானே உன்னால் உரைக்கக்கூடிய எப்பொருளும் உனது சொரூபம் அல்ல ஆன்மா அல்ல என்று உபதேசித்தீர்கள் நான் ஒப்புக் கொள்கிறேன். என்னாலே உணரப்படாத, அறிய முடியாத நான் என்னும் பொருள் வேறு ஏதேனும் உண்டோ எனக்கு புரியும் வண்ணம் விளக்கிச் சொல்லுங்கள் என்று பணிவோடு வேண்டினான்.

Koviloor Digital Library

63. அறியாப் பொருள்கா ரணமா யைகுறித்து
அறியும் பொருள்கா ரியமாம் உலகுஇந்
நெறியால் திகழ்நான் மறைஅந் தம்எலாம்
நீஅன்று எனவோ துநிரந் தரமே.

நம்மாலே சுட்டிக் காட்டி அறிய முடியாத பொருள்கள் பலவுண்டு. அவை இந்த "ஜகத்" உருவாவதற்கு காரணமான மாயையின் செயலாகும். சுட்டி அறியக் கூடிய பொருள்கள் யாவும் காரியம் ஆகிய உலகம் "ஜகத்" ஆகும் (காரணம் - பிரம்ம்ம் - மாயை) காரணமாகிய மாயையை சாதாரண "ஜீவர்களால்" அறிந்து கொள்ள முடியாது. நான்கு வேதங்கள், உபநிஷத்துகள் அனைத்தும் அறியக் கூறிய பொருளாகிய காரியம் அனைத்தும் ஆன்மாவாக முடியாது என்று உறுதிபடச் சொல்கிறார். எனவே காரணம், காரியம் இரண்டும் "நீ" அல்ல. இரண்டுக்கும் சாட்சியாய் இருக்கின்ற ஆன்மாவே நீ.

64. அறியும் பொருள் அன்று அறியாப் பொருளன்று
அறிவா கியநீ எனும்அப் பொருள்தான்
பொறியின் வழிநின்று அறியும் பொருளோ
போதக் கண்விழித்து அறியும் பொருளே.

அறிந்து உணரமுடியாத பொருள்கள் காரணமாயை தொடர்பானது கேட்டு, கண்டு அறியப்படக் கூடிய பொருள்கள் காரியங்கள், காரணம் கருவி கர்த்தா என மூன்றும் சேர்ந்து இயங்கினால் தான் காரியம் உருவாகும். பிரம்மம் ஆதிகாரணம் மாயை / ஈசன் உபாதன காரணம் கருவி ஈசனுடைய சங்கல்பம் (இந்த ஜகத்தை படைக்க வேண்டும் என்கின்ற ஈசுவரனுடைய சங்கல்பம்) காரியம் படைக்கப்பட்ட ஜகத். இதற்கு எளிய உதாரணம் மண்பாண்டம், பொம்மை போன்ற மண்ணால் ஆக்கப்பட்ட பொருள்கள். மண்பாண்டம் உருவாவதற்கு ஆதிகாரணம் பிரம்மம் உபாதன காரணம் ஈசுவரன் / மாயை அதன்மூலம் உற்பத்தி ஆன மண் கர்த்தா குயவன், கருவி சுழல்கின்ற சக்கரம், மரப்பலகை உருவான காரியம் மண்பாண்டம். மண்ணால் செய்யப்பட்ட பொருள்கள் பலவிதம் இருக்கலாம். மண்பாண்டம், சட்டி, குடங்கள், பொம்மை இவையாவும் காரியம் உருவாகும் காலத்தில்

Koviloor Digital Library

ஏற்பட்ட பேதங்கள், விகற்பங்கள். இப்படி எக்காரியம் செய்யப்பட்டாலும் அது செயல்படுவதற்கு ஒரு ஆதிகாரணம் இருக்க வேண்டும் காரணத்திற்கும் காரியத்திற்கும் இடையே பேதங்கள் இருக்க முடியாது. காரியங்களுக்குள்ளே வேறுபாடுகள் இருக்கலாம் எனினும் யாவும் காரணத்தின் சொரூபமே. எப்பொருளை உடைத்தாலும் மிஞ்சுவது மண்ணே. எனவே காரணமாகிய மண்ணிற்கும் காரியமாகிய மண்பாண்டத்திற்கும் அடிப்படைப் பேதம் இல்லை. இப்படிக் காரண காரியங்கள் விவரிக்கப்படும். இந்த முறையிலே உலகில் யாவும் காரியமே - இதனால் நான்மறைகளும் வேதம், வேதாந்தம் அனைத்தும் "நீ" அல்ல. "நீ" மட்டும், - உன் ஆன்மசொரூபம் மட்டுமே நிரந்தரம். எனவே அறியப்படக் கூடிய பொருளும் "நீ" இல்லை அறியப்பட முடியாத பொருளும் "நீ" இல்லை. ஆன்ம சொரூபத்தை ஞானேந்திரியங்கள் அந்தக்கரணங்கள் வழியாக அறிய முடியாது. ஞானக்கண் ஒன்றால் மட்டுமே அதனை அறிய முடியும், உணர முடியும், ஞானவிசாரத்தால் மட்டுமே உணர முடியும்.

65. வேதப் பொருள்தான் இதுவே றுசொலும்
வினையா வையும்அன்று ஒருவே றும்இலாப்
போதப் பொருள்அந் தமறைக்கு அணியாம்
புனிதப் பொருள்தத் வமசிப் பொருளே.

வேதத்தின் அடிநாதம் பிரம்மத்தை அறிவதே. அதற்கு வேறான கருமங்கள், யாகங்கள், யோகங்கள் யாவும் ஞானத்தை அறியும் கருவிகள் அல்ல. குருமகானுடைய உபதேச வாக்கியங்களும் ஸ்ருதி, உபநிஷத், கீதை, பிரம்ம சூத்திரம், (பிரஸ்தானத் திரயம்) ஆகியவற்றைக் கற்றுத் தேர்ந்து அதன் வழியாக ஆன்ம விசாரம் செய்வதால் பேதங்கள் இல்லாத, ஆதிஅந்தம் இல்லாத, நிரந்தரமான ஞானவஸ்துவை, பரம்பொருளை உணர முடியும். தத்துவமஸி என்ற மகா வாக்கியத்தின் உயர்ந்த பொருளும் அதுவே.

66. நிமலம் ஆம்பரம் அது எனும்பொருள்
நீஎ னும்பொருள் சீவனே
அமலம் ஆனஇ ரண்டு ஐக்கியம்
அசிப தப்பொருள் ஆவதே.

Koviloor Digital Library

கலங்கமில்லாத பூரணமான பரம்பொருள் "**அது**" எனும் பொருள் படும். (தத்) துவம் என்பது "ஜீவர்கள்" எனும் பொருள் படும் (ஜீவனாகிய நீ எனும் பொருள்) அஸி என்பது இருக்கின்றாய் என்பது பொருள் களங்கமற்ற பரம்பொருளும் ஜீவனும் ஒன்றே என்பதே பொருள். (தத் - பரம்பொருள், துவம் - ஜீவன் ஆகிய நீ, அஸி - இருக்கின்றாய்)

67. அருமை ஆகிய பிரமம் முன்னிலை
ஆகும் ஆருயிர் பின்னிலை
இருமை ஆனஇ ரண்டு ஐக்கியம்
எய்தும் ஆறுஎவன் என்னவே.

சசிவன்னனுக்கு குருமகானுடைய உபதேசம் முழுமையாகப் புரியாமல் ஐய்யம் எழுகிறது. அறிதற்கு அறிய உயர்பொருள் பிரம்மம் ஜீவர்களோ கடைப்பட்டவர்கள் எங்ஙனம் இரண்டும் இனைய முடியும். ஜீவபிரம்ம ஐக்கியம் நிகழும் வழி தான் என்ன என்று சசிவன்னன் கேட்க நந்திபராயணர் விளக்கம் கூறத் தொடங்கினார்.

68. உபாதி யால்வரு பேத மேஇவர்
பேதம் அன்றுஉரு உயிரினின்
கபஆதி யாம்உடல் போல்இ றைக்குள
காரண ஆதிகள் காயமே.

உபாதியால் வருகின்ற பேதங்களே ஜீவன், பிரம்மம் இருவரையும் தனித்தனியாய்க் காட்டுகிறது. ஈசுவரனுக்கும் ஜீவனுக்கும் உள்ள வேறுபாடுகள் உபாதிகளால் ஆனவையே. ஜீவனுக்கு நோய் நொடிகள் - கபம், வாதம், பித்தம் - இவற்றால் ஏற்படும் நோய்கள், வளர்சிதை மாற்றங்களால் ஏற்படும் சிறுவன், இளைஞன், நடுத்தர வயது, நரை திரை மூப்பு, முதுமை, இறப்பு என்ற உபாதிகள் ஜீவனுக்கு உண்டு. இவை காரியமான ஜீவனுக்கு ஏற்படும் காரிய உபாதிகள் ஆகும். காரணமாகிய ஈசுவரனுக்கு இதே போன்று காரண உபாதிகள் ஏற்படும் அவற்றை அடுத்த பாடலில் விவரிக்கிறார்.

சீரிய ஈசனார்க்கும் சீவர்க்கும் உபாதி ஒன்றேல்
ஆரிய குருவே பேதம் அறிவதுஎப் படிஎன் றக்கால்

Koviloor Digital Library

காரிய உபாதி சீவன் காரண உபாதி ஈசன்
வீரியம் மிகுச மட்டி வியட்டியால் பேதம் ஆமே.

கைவல்யம் த.வி.ப. 43

யுதிருட்சை = *காரியம் முதலியவற்றால் உபேட்சை (விருப்பம்) உண்டாகாமை*

நிர் + உபாதி = *நிருபாதி உபாதிகள் அற்ற காரியம் - அது - சம்ஹாரம் காலந்தான் எனவே நிருபாதி.*

69. ஈசன் முற்றுஅறி வான்வி யாபி
எவைக்கும் ஏதுஇ யம்பும்ஆ
காச கன்நிரு பாதி பாவனை
காரண ஆதிகள் ஆவதே.

எப்பொருளுக்கும் மேலானவன், எங்கும் நிறைந்தவன், முழுதும் அறிந்தவன், எல்லாவற்றிற்கும் காரணமானவன் ஆகிய ஈசுவரனுக்கும் உபாதிகள் உண்டு. எல்லாவற்றையும் படைப்பவன், அனைத்தையும் காப்பவன், அனைத்தையும் அழிப்பவன் ஆக ஏழு வகை காரண சப்த உபாதிகள் ஈசுவரனுக்கு உண்டு.

70. நீதி யால்இரு உபாதி நீக்கிட
நீள னச்சொல்ப தத்தினும்
ஆதி ஆகிய தற்ப தத்தும்
அசுத்த சுத்தம்உ ரைத்துமே.

ஜீவர்களுடைய உடலுக்கு தவிர்க்க முடியாத காரிய சப்த உபாதிகள் - சொன்னது போல் ஏழு வகை உண்டு ஆத்மா என்பது சொல்லக் கூடிய த்வம் சோகம் நீங்கிய உடல் உபாதிகள் இல்லாத சாட்சியாக உள்ளதே ஆத்மா ஆகும்.

71. ஆகம் முன்திகழ் ஏழும் நான்எனல்
தொம்ப தத்தில்அ சுத்தமே
சோகம் இன்றிய சான்று நான்எனல்
தொம்ப தப்பொருள் சுத்தமே.

அசுத்தம் களைந்த ஒன்றே த்வம் ஆகும் "நான்" கர்த்தா, "நான்" போக்தா, "நான்" கருவி என்ற நினைவுகள் த்வம் பத்தில் அசுத்தம் ஆகும். ஆத்மா என்பது தான் ஏழு

Koviloor Digital Library

உபாதிகளுக்கும் சாட்சியாக மட்டுமே இருக்கிறேன் நான் கருமத்தில் ஈடுபடவில்லை என்ற பாவனையே சுத்தம் ஆகிய த்வம்.

72. அகில காரணம் ஆதி நான்எனல்
தற்ப தத்தில்அ சுத்தமே
சகல காரண சான்று நான்எனல்
தற்ப தப்பொருள் சுத்தமே.

மேலே சொல்லப்பட்ட காரண உபாதிகள் காரிய உபாதிகள் பற்றிய உண்மைகளை விசாரித்து, அவற்றிலிருந்து விலகியிருந்து, நாசம் அடையச் செய்து, மீதமுள்ள உபாதிகளற்ற கூடஸ்தனே பிரம்மத்தை உணரத் தகுதியுடையவன் ஆவான். அவ்வாறு கூடஸ்தன் தன்னை உணர்ந்த பின் வாசனா, மலமும் நீங்கப் பிரமத்துடன் ஐக்கியம் ஆகிறது. இதுவே இருக்கின்றார் என்று சொன்ன அசிபதத்தின் பொருளாகும்.

(உபாதி = தனித்தன்மையை வேறோர் பொருளின்கண் உள்ளதாக மாறித் தோன்றுவது).

73. செறிந்த காரண காரி யங்கள்
சிதைந்து மேல்உறு சித்தாய்
அறிந்த வாதனை தானும் அற்றதுஅவ்
அசிப தப்பொருள் ஆவதே.

காரண காரியம் ஆகிய இரண்டிற்கும் இயல்பாக உபாதிகள் உண்டு. ஆதிகாரணமாகிய பிரம்மத்திற்கு உபாதிகள் இல்லை. உபாதன காரணமாகிய ஈசுவரனுக்கு உபாதிகள் உண்டு அதே போல காரியமாகிய ஜீவர்களுக்கும் உபாதிகள் உண்டு. ஈசுவரனுக்கான உபாதிகள்

1. **ஈசன்** - சர்வேஸ்வரன், யாவற்றிற்கும் மேலானவன்
2. **சர்வஞ்ஞன்** - முற்றும் அறிந்தவன், எல்லாவற்றையும் அறிந்தவன்
3. **சர்வவியாபி** - எங்கும் நிறைந்தவன், எவற்றிலும் நிறைந்திருப்பவன்
4. **எவைக்கும் ஏது** - எவற்றிற்கும் காரணமானவன்

Koviloor Digital Library

5. **ஆகாசகன்** - *சர்வசிருஷ்டி, யாவற்றையும் சிருஷ்டிப்பவன்*

6. **சர்வ ஸ்திதிஞன்** - *பாவனை, யாவற்றையும் ரட்சிப்பவன், காப்பவன்*

7. **நிருபாதி** - *சம்ஹறான் யாவற்றையும் அழிப்பவன்.*

ஈசுவரன் ஒருவனே ஆனாலும் அந்த அந்த காரியங்கள் செய்கின்ற பொழுது அந்த அந்த உபாதிகள் ஏற்படுகின்றது. ஜீவர்களுக்கு ஏழு வகை உபாதிகள் உண்டு அவையாவன தூல சரீரம், இந்திரியம், பிராணன், மனம், புத்தி, சித்தம், அகங்காரம். இப்படிப்பட்ட காரண சப்த உபாதிகளும் காரிய சப்த உபாதிகளும் தீர விசாரிக்கின் எல்லாம் மித்தை என்பது புரியும். இந்த உபாதிகள் ஒடுங்கின் மீதம் உள்ளது கூடஸ்தனும் பிரம்மமும் என்ற ஞானமே. இந்த உபாதிகள் யாவுக்கும் சர்வ சாட்சியாக, ஞான சொரூபம் மாத்திரமே பிரம்மம் என்பது புரியும் அதுவே "த்த்" என்பதன் பொருள்.

74. அசுத்தம் ஆகியது இருப தத்தினும்
முக்கி யப்பொருள் ஆகுமே
விசுத்தம் ஆனதுஇ லக்கி யப்பொருள்
என்று சொல்லுவர் விமலரே.

தத், த்வம் இரண்டு சொற்களிலும் சுத்தம், அசுத்தம் உண்டு. அசுத்தம் உடைய பொருளை முக்கியப் பொருளாகக் கருத மாட்டார்கள். சுத்தமான பொருளையே இலட்சியப் பொருள் என்று பெரியோர் கூறுவர்.

75. முரண்ட சீவப ரங்கள் தம்முடல்
முக்கி யப்பொருள் ஆவதே
இரண்டில் வேறுஅறு சிற்சொரூபம்
இலக்கி யப்பொருள் ஆவதே.

ஒன்றிற்கொன்று முரனான பிரம்மமும் ஜீவனும் ஐக்கியம் அடைய இயலாது. ஜீவன் தன் தேகமாகிய ஏழு உபாதிகளைக் கூடிய பொருள் "நான்" அல்ல என்னுடைய ஆன்மா அல்ல என்று தெளிவாக உணர்ந்த பின் காரியத்தின் அசுத்தம் நீங்குகிறது. சாட்சி சொரூபமாக உள்ள ஞானமே, கூடஸ்தனே "நான்" என்று உணரும்போது அசுத்தம் நீங்கி

Koviloor Digital Library

விடுகிறது. அந்தத் தருணத்தில் ஜீவபிரம்ம ஐக்கியம் கைகூடும் இது திண்ணம். சப்தத்திற்கு அர்த்தத்தோடு உள்ள சம்பந்தம் - (ஒரு வார்த்தைக்கு இயல்பாக அறியப்படும் பொருள்) அவை விருத்தி என்று அறியப்படும். அவை இருவகைப்படும். ஒன்று சத்தி விருத்தி, இரண்டு இலட்சணா விருத்தி. கடம் என்ற சொல்லைக் கேட்டவுடன் மண்பாணை மனதில் தோன்றுவது சத்தி விருத்தி. அதையும் தாண்டி அந்தப் பாணையோடு சம்பந்தப்பட்ட யாவையும் கண்முன்னே தோற்றுவிப்பது இலட்சணா விருத்தி (மண், குயவன், சக்கரம், மரப்பலகை அனைத்தும்) அக்கினியில் தன்னைச் சேர்ந்த வஸ்துகளே தகிக்கும்படியான சத்தி எப்படி உண்டோ அப்படி சத்தத்திற்கு சுரோத்திரத்தோடு சேர்ந்து பொருளின் தன்மையை உணரச் செய்யும் சாமர்த்தியம் உண்டு. அதுவே சத்தி விருத்தி அதையும் தாண்டி அப்பொருளோடு கூடிய அனைத்துப் பொருளையும் செயல்களையும் முழுமையாக உணர்த்துவது இலட்சணா விருத்தி ஆகும்.

76. ஊக்கி யப்பர சீவர் தங்கள்
உடம்பு இரண்டும் இலக்கணா
வாக்கி யப்படி நீக்கி னால்ஒரு
வத்து வேபர வத்துவே.

ஈசுவரன், ஜீவன் என்ற இரண்டு சொற்களின் சத்தி விருத்தி அல்லது உபாதிகளுடன் கூடிய ஈசுவரன், ஜீவன் ஆகியவற்றின் உடல் சத்தி விருத்தி ஆகும். (ஈசுவரன், ஜீவன் இருவருக்கும் உபாதிகள் உள்ள படியால் இருவரையும் ஏக ரூபமாக்க் கொள்கிறோம்.) இந்த இரண்டும் ஒன்றே என்ற ஞானம் தோன்றினால் ஏகமான பிரம்ம வஸ்து மட்டுமே நிலைத்து இருக்கும் (ஈசுவரன், ஜீவன் என்பவை இரண்டல்ல ஒன்றே.)

ஈசுவரன்	= பிரம்ம்ம் (அதிஷ்டானம்)
மாயை	= ஆசரேயம்
மாயையில் பிரதி பிம்பம்	= ஆபாசம்
ஜீவன்	= அதிஷ்டானம், கூடஸ்தன்
ஆசரேயம்	= அவித்தை
ஆபாசம்	= அவித்தையில் பிரதி பிம்பம்

Koviloor Digital Library

லட்சணை மூவகைப்படும். விட்ட லட்சணை, விடாத லட்சணை, விட்டு விடாத லட்சணை ஆகியவை ஆகும்.

விட்ட லட்சணை : சொல்கின்ற உதாரணத்திற்கும் சொல்ல விரும்புகிற உவமேயத்திற்கும் நேரடி சம்பந்தம் எதுவும் இன்றி யுக்தியினால் அறியக் கூடிய லட்சணைச் சொல் விட்ட லட்சணை ஆகும். உதாரணம் கங்கையில் கொண்டாட்டம், காவிரியில் தீப்பிடித்தது. கங்கைக்கும் கொண்டாட்டத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லாத போது சொல்லப்பட்டது விட்ட லட்சணை ஆகும். கொண்டாட்டம் நடை பெறுவது கங்கைக் கரையில் உள்ள ஒரு கிராமத்தில் எனவே கங்கைக்கும் கொண்டாட்டத்திற்க்கும் தொடர்பு இல்லை. சொல்லக் கருதியது கங்கைக் கரையிலே உள்ள காசியில் கொண்டாட்டம் எனவே உவமேயத்தை விளக்குவதற்காக சொல்லப்பட்டிருந்தாலும் உடனடியாகத் தொடர்பு படுத்த முடியாத்தால் விட்ட லட்சணை என்று கூறப்படுகிறது.

விடாத லட்சணை : செவலை ஓடுகிறது பிடிங்கப்பா என்ற வாக்கியத்திலே செவலை நிறமுடைய பசு மாடு ஓடுகிறது என்பது தெரிகிறது. எனவே செவலை என்ற பன்புச் சொல் பசுமாட்டைக் குறிப்பதால் நேரடித் தொடர்புடையதாகிறது எனவே இது விடாத லட்சணை (உவமேயத்தை விட்டு விலகாத உவமை)

விட்டு விடாத லட்சணை : "அந்த சண்முகம் முன்னர் பல வருடங்களுக்கு முன்னால் காசியில் பார்த்தவர் தான், இப்பொழுது இராமேஸ்வரத்தில் அவர் துறவியாக தரிசனம் செய்ய வந்திருக்கிறார்." இதிலே சண்முகம் என்கிற நபர் ஒருவர் தான் ஆனால் கால தேச வர்த்த மானங்களால் ரூபம் மாறித் தென்படுகிறார். இதுவே விட்டு விடாத லட்சணை. இந்த விட்டு விடாத லட்சணத்தைக் கொண்டு தான் பிரம்மத்தினுடைய சத்தியத் தன்மையை நிருபிக்கிறார்கள்.

77. ஓரில் விட்டதும் விட்டி டாததும்
உபய மும்என உணர்வுஉளோர்
தேரில்இ லக்கணை திரிவி தத்தில்
இசைப்பர் மற்றது இயம்புவாம்.

Koviloor Digital Library

ஸ்ருதி வாக்கியங்களை க்ரந்தங்களை ஆராயும் பொழுது விட்டது விடாதது விட்டுவிடாதது என மூன்று வகையான லட்சணங்கள் உள்ளன என்று பெரியோர்கள் கூறுவார்கள்.

78. மஞ்சு கூப்பிடுது என்றல் போலவும்
வடப கீரதி உள்ளதே
விஞ்சு கோஷம் அது என்றல் போலவும்
விட்ட லக்கணை ஆவதே.

வடக்கு கங்கையிடத்து பலத்த ஆரவாரம் கேட்கின்றது என்று பேசுவது விட்ட லட்சணை ஆகும். கங்கைக் கரையில் உள்ள ஒரு கிராமத்தில் திருவிழாக் கொண்டாட்டம் நடைபெறுகிறது. இங்கு கூறிய உவமையால் கங்கைக்கு நேரடித் தொடர்பில்லை எனவே விட்ட லட்சணை ஆகும். அதே போல கட்டில் கூப்பிடுகிறது என்றால் கட்டிலில் படுத்திருக்கிறவர் அழைக்கின்றார் என்று பொருள் இதுவும் நேரடித் தொடர்பு இல்லாத்தால் மதியூகத்தால் அறிய வேண்டிய லட்சணை ஆகும் எனவே விட்ட லட்சணை என்று அழைக்கப்படும்.

79. சிவலை நின்றது வெள்ளை போயினது
என்று செப்புதல் போலவே
கவலை இன்றிவி டாத லக்கணை
என்று நீ கொள் கருத்திலே.

செவலை மாட்டுத் தொழுவத்தில் கட்டி இருக்கிறது வெள்ளை ஓடி விட்டது என்றால், செவலை மாடு தொழுவத்தில் கட்டி இருக்கிறது. வெள்ளை மாடு ஓடி விட்டது என்று பொருள் இந்த இரண்டு வண்ணங்களும் நேரடித் தொடர்பு கொண்டிருப்பதால் இது விடாத லட்சணை. ஏ மாம்பழம் என்று கூப்பிட்டால் பழம் விற்பவன் வருகிறான் இப்படி சொன்ன சொல்லோடு நேரடித் தொடர்புடைய மற்றொரு அர்த்தத்தை கொடுக்கிற உவமை விடாத லட்சணை ஆகும்.

80. மேவும் விட்டுவி டாத லக்கணை
மெய்ம்மை யாதுஎனில் அந்தஇத்
தேவ தத்தன்எ னும்பொ ருள்படி
சிந்தை செய்திடு தீரவே.

Koviloor Digital Library

வேதாந்தக் கருத்துக்கள் குறிப்பாக தத்துவமஸி என்ற மகாவாக்கியத்தில் விட்டு விடாத லட்சணையால் முமூட்சு புரிந்து கொள்ள முடியும் எப்படி என்றால் காசியில் பார்த்த தேவ தத்தனே இராமேஸ்வரத்தில் பார்க்கும் துறவி இவர் என்று சொல்வதைப் போல் புரிந்து கொள்ளலாம் இதுவே விட்டு விடாத லட்சணை ஆகும்.

81. விட்ட லக்கணை தனையும் விட்டுவி
டாத லக்கணை தனையும்நீ
விட்டு விட்டுவி டாத லக்கணை
யால்வி ளங்குவி ளங்கவே.

விட்ட லட்சணை மற்றும் விடாத லட்சணை ஞான விசாரத்திற்கு அவற்றை விலக்கி விட்டு விடுதல். விட்டு விடாத லட்சணை மூலம் உன் சொரூபத்தை நன்றாக அறிவாயாக. ஞான உருவான சாட்சியாய் இருக்கின்ற ஜீவனே முற்காலத்தில் அனான்ம வடிவாக இருந்தவன் இப்பொழுது பிரம்ம சொரூபமாக விளங்குகிறான் இதுவே விட்டு விடாத லட்சணை ஆகும்.

82. போது மேவிய தேசம் விட்டுஒரு
புருட னைக்கொளும் ஆறுபோல்
ஓதும் ஈருடல் கண்டு விட்டதன்
உண்மை காண உணர்ந்திடே.

அதிஷ்டானமாய் உள்ள கூடஸ்த பிரம்ம சைதன்னியங்கள் இரண்டல்ல ஒன்றே என்று அந்த மகா வாக்கியத்தின் வாயிலாக உண்மையை உணர்ந்துகொள். தத்பதத்தில் சர்வகாரணன் முதலிய ஏழு உபாதிகளையும் நீக்கி எஞ்சிய பிரம்ம சைதன்னியமும், துவம்பதத்தில் தூலதேகம் முதலிய ஏழு உபாதிகளையும் நீக்கி எஞ்சிய கூடஸ்தனும் ஒன்றே இரண்டல்ல என்று தெளிய வேண்டும். அவனே இத்தேவதத்தன் என்பதில் அவன் என்பது காசி ஷேத்திரத்தில் இராஜாவாக குறைந்த வயதுடன் ஒருவனைக் குறிக்கும். இவன் என்பது இராமேஸ்வரத்தில் சந்நியாசி வேடத்துடன் அதிக வயதுடன் பார்த்த (அந்த இராஜாவை) குறிக்கும். இதில் காசி ஷேத்திரம், இராஜ வேடம், குறைந்த வயது, இராமேஸ்வர ஷேத்திரம், சந்நியாச வேடம், அதிக வயது ஆகிய விரோத வாதங்களை விட்டுப் புருஷனை மாத்திரம்

Koviloor Digital Library

பார்த்தபோது அவனே இவன், காசியில் ராஜவேடத்தில் பார்த்த அவனே இப்போது இராமேஸ்வரத்தில் சந்நியாசி வேடத்தில் பார்த்த இவன் (இவனே அவன் என்று ஏகத்துவம் சித்திக்கின்றது.) அது போல தத்துவமஸி என்னும் மகா வாக்கியத்தில் ஈசுவர ஜீவர்களின் விரோத தர்மங்களான காரண காரிய உபாதிகளை விட்டு அவிரோத பாகமாகிய கூடஸ்த பிரம்ம ஐக்கியத்தைக் கொள்வதாம். விரோதமாகிய அசேதனமாகிய உபாதிகளை விட்டு விரோதமின்றிய சுத்த சேதனம் கொள்ள வேண்டும் இஃதே பாகத்தியாக லட்சணை எனப்படும். வாச்சியார்த்தம் விட்டு இலட்சியார்த்தம் கொள்வது. ஸ்ருதியும் பிரம்மம் சச்சிதானந்த வடிவம் என்கிறது. ஜீவனுக்கும் மூன்று அவஸ்தைகளிலும் "நான்" இருக்கிறேன் என்ற உணர்வு உண்டு, ஆதலால் சத்து. ஜீவன் மூன்று அவஸ்தைகளையும் அறிவதால் சித்து. ஜீவனும் சுழுத்தியில் ஆனந்த வடிவமாகவே இருக்கிறான். ஆதலால் ஆனந்தமானவன் ஆதலால் ஜீவனும் உண்மையில் சச்சிதானந்த வடிவமாய் இருக்கிறான். ஆதலால் ஜீவன் பிரம்மம் இவை வேறு வேறல்ல "ஒன்றே" என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

83. பிரியா உயிர்கா ரியமாம் உடலும்
பிரமத்து உறுகா ரணமாம் உடலும்
கரிஆ கியவா தனையும் கழியக்
காட்டும் படிகண் டுகொள்கண் உறவே.

சீவனை விட்டு நீங்காதிருக்கின்ற காரிய உபாதியாகிய ஏழையும் ஈசுவரனை விடாமல் பொருந்திய காரண உபாதியாகிய ஏழையும் அவ்வுபாதிகள் இரண்டிற்கும் சாட்சியாகிய கூடஸ்த பிரம்மங்களை முறையே சீவ ஈசுவரர்களது உண்மை வடிவமாக உணர்ந்து அப்படி சாட்சியாக உணர்ந்த அந்த (துவித) வாதனையும் நீங்க நாம் உபதேசிக்கும் விதமே நீ பிரத்தியட்சமாகத் தெரிந்து கொள்வாய்.

84. கரணத் திரள்நிற் பினும்அப் பொருளைக்
காணக் கிடையாது அவைகை அறவே
மரணப் படினும் அதுகண் டுகொளும்
வழிஇல் லைஎனும் படிநீ மதியே.

Koviloor Digital Library

அகக்கரணமும் புறக்கரணமும் முழுமையாகச் செயல்படக் கூடிய விழிப்பு நிலையிலும் அந்தப் பிரம்மத்தைக் காண இயலாது. அகக்கரணமும் புறக்கரணமுமாகிய யாவும் ஒரு செயலுமின்றி ஒடுங்கி நிற்கின்ற உறக்க நிலையிலும் அந்தப் பிரம்மத்தை அறிந்து கொள்ளும் மார்க்கம் இல்லை என்பதை தெரிந்து கொள்வாய். விழிப்பு நிலையில் மித்தையாகிய உலகப் பொருளை உணர்வதற்கும், உறக்கத்தில் ஒன்றும் உணராமைக்கும் இந்த இரண்டு அவஸ்தைகளும் கருவியாகலின், பிரம்மத்தை உணர்வதற்கு இந்த அவஸ்தைகள் பயன்பட மாட்டாது என்று உணர வேண்டும்.

85. எந்தக் கரணங் களும்மே வல்நனா
இதில்வா தனையால் விடயங் களொடே
அந்தக் கரணங் கள்பொருந் தல்கனா
அவைமாய் தல்சுழுத் தியவத் தையே.

தூல உடலுக்கே சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி ஆகிய மூன்று நிலைகளும் உண்டு. அவித்தையில் பிரதிவிம்பனாயுள்ள சிதாபாசன் சாக்கிரத்தில் இந்த 26 தத்துவங்களுடன் கலந்து நிற்கும் போது விசுவன் என்றும், சொப்பனத்தில் தூல சரீரத்தை விட்டுச் சூட்சும சரீரத்துடன் கூடி நின்ற போது தைஜசன் என்றும், சுழுத்தியில் காரிய சரீர தத்துவங்கள் 26 யும் கைவிட்டு காரண சரீரத்தை மாத்திரம் பொருந்தியிருக்கும் போது பிராஞ்ஞன் என்றும், பிரம சைதன்னியமும் சாக்கிரத்துக்குச் சாட்சியாய் இருக்கும் போது சீவாத்மா எனவும், சொப்பனத்துக்குச் சாட்சியாய் இருக்கும் போது அந்தராத்மா எனவும் சுழுத்திக்குச் சாட்சியாய் இருக்கும் போது பரமாத்மா எனவும் அவத்தாத்திரய (மூன்று அவத்தைகளிலும்) சாட்சியாய் இருக்கும் போது ஞானாத்மா எனவும் கூடஸ்தன் எனவும் சொல்லப்படும். சாட்சியாகிய கூடஸ்தன் இலட்சியார்த்தம் [இவை 10 வாச்சியார்த்தம் அவை 3 சரீரங்கள், (3 அபிமானிகள்: விசுவன், தைஜசன், பிராஞ்ஞன்) 3 அவத்தைகள், 1 சாட்சியாகிய சைதன்னியம்]

86. வினவில்ப ரத்தைஅறிவு உறுதற்கு
அவத்தைபுலன் வினைமாறியே
நனவில்சு ழுத்திநிலை வரின்அப்
பொருள்திகழும் நலம்ஆகவே.

Koviloor Digital Library

சுரோத்திரம் முதலிய பொறிகள் அனைத்தையும் பொருந்தியி ருந்தாலும் விஷய அனுபவ ரூபமான பகிர்முக விருத்தி அவைகட்கு இல்லாமையால் நனவிற் சுழுத்தி எனப்பட்டது. அந்தக்கரணத்தையும், அதன் விருத்திகளையும் (எண்ணங்களையும்) ஒளிர்விக்கின்ற (துவம்பத இலட்சியார்த்த பிரத்யக்) சாட்சி வடிவ ஆன்மாவை அன்னமயம் முதலிய ஐந்து கோசங்களிலும் வேறுபடுத்தி பிரித்து அறிய வேண்டும், இப்படி விசாரத்தினால் பிரம்ம அனுபவம் உண்டாகும்.

87. திவிதத்து அவத்தைகளை அறிவுஉற்ற
அத்துரியநிலை சீவனே
இவிதத்தில் அப்புருடன் நனவுற்ற
அத்துரியநிலை ஈசனே.

ஜீவன் துரிய நிலையிலும் புருவ மத்தியில் சகல கரணங்களும் கூடி விழிப்பு உணர்வோடு இருப்பதால் தூங்கும் போது சரீரம் விழுவது போல் விழுவதில்லை. சுழுத்தியில் விழுந்து விடும் ஈசுவரனின் துரிய நிலையில் விளங்கும் சர்வ சாட்சியாய் பிரம்மமும் ஜீவனின் துரிய நிலையில் விளங்கும் சாட்சியாகிய கூடஸ்தன்.

88. அகிலக்க ரிப்பரம துரியப்பொ
ருள்துரியம் அதுஆகையே
புகல்உற்ற தத்வமசி எனும்முப்ப
தத்தின்முடி பொருள் ஆவதே.

(சர்வத்திற்கும்) எங்கும் நிறைந்து சாட்சியாக விளங்குகின்ற ஈசுவர துரியமான பிரம்மமே சீவ துரியமான ஆத்மாவாம். ஈசுவர துரியமாகிய பிரம்மமானது சீவ சாட்சியாகவும் (ஐக்கியமாய்) இருப்பதை அறிவதே (சாமவேத்தில் உள்ள சாந்தோக்கிய உபநிஷத்தில் சுவேதகேதுவிற்கு உத்தாலக முனிவர்) கூறியருளிய "அது நீ ஆனாய்" என்கிற மூன்று சொற்களின் முடிந்த பொருளாம் சீவ சாட்சியானது ஈசுவர சாட்சியாகிய பிரம்மமாகவும் ஈசுவர சாட்சியாய் பிரம்மமானது சீவ சாட்சியாகவும் ஒன்றாய் இருக்கிறது அது நீ ஆனாய் என்ற பதத்தின் பொருளாகும்.

Koviloor Digital Library

89. நிமலப்பொ ருள்சுருதி நெறியில்
பெறக்கருணை நிதிகூறவே
அமலப்பொ ருள்பெறுதல் அருமைத்து
எனக்கழறி அடிவீழவே.

கருணா நிதியாகிய நந்திபராயணர் சுருதி வாக்கிய விசார வாயிலாக நின்மலமாகிய பிரம்மத்தை அடையும்படி உபதேசிக்க (சசிவன்னன்) சுத்தப் பிரம்மதை என் போன்றவர்கள் அடைதல் இயலாது என்று அழுது, துதித்து குருதேவரின் திருவடிகளை விழுந்து வணங்கினான்.

90. தமரக்க லைக்குஅளவு தெரிவுஅற்ற
தத்பொருள்அ தனைஈகுவான்
அமரர்க்குஅ ளப்புஅரிய பதம்நல்பு
னல்கொடுசெய்து அபிடேகமே.

தேவர்களாலும் அளவிட்டு அறிதற்கரிய சப்தரூபமாகிய வேதங்களால் (வேதம் எழுதாக்கிளவி எனப்படுதலின்) அறியப்படாத தத்பதார்த்தமாகியவன் பிரம்மமே. துவம்பதார்த்தமாகிய கூடஸ்தன் என்பதனை அங்கை நெல்லிக்கனி போல் சசிவன்னன் அறியும் பொருட்டு ஆசிரியர் தனது பாத தீர்த்தத்தைக் கொண்டு சசிவன்னனுக்கு அபிஷேகம் செய்தருளினார். பிரம்மம் "த்த்" என்ற சொல்லின் சத்தி விருத்திக்கு விடயமன்று. ஆனால் அவற்றின் இலட்சணா விருத்திக்கு விடயமாம் என்பதால் தமரக்கலைக்கு அளவு தெரிவதற்கரிய தற்பொருள் என்றார்.

91. பவளத்தில் வைத்தஅமிர் தின்இன்மிச்சில்
இட்டுஇனிய பரிவோடுமா
தவளப்பொ டிக்கவசம் எனவிட்டு
உடல்பகைகள் தலைசாயவே.

இனிமையான அன்பினால் பவளம் போல் சிவந்த இதழ்களில் வைத்து திருவமுது செய்தருளிய அமிர்தத்தை ஒத்த பிரசாதம் கொடுத்து அருளினார். உடல் முதலிய ஏழு காரிய உபாதிகள் என்னும் பகைகள் நசிக்கும்படி பெருமை மிக்க வெண்மையான விபூதியை கவசம் போல் தரித்து அருளினார்.

Koviloor Digital Library

92. உதகத்து உடல்பொருளொடு உயிர்கைக்கொடு
உச்சிமிசை ஒருபோதொடே
பதகத்த லத்தைவிட இருகைத்
தலத்தொடுஇரு பதம்மேவியே.

நீரினால் சசிவன்னன் தத்தம் செய்த உடல் பொருள் ஆவி மூன்றையும் ஏற்றுக் கொண்டு ஒரு க்ஷனத்திலேயே அஞ்ஞானத்திலிருந்து நீங்கி தத்துவஞானம் அடைந்து அனுபவத்தைப் பெறுமாறு சிரசின் மீது இரு கரங்களோடு இரண்டு திருவடிகளையும் பொருந்தும் படி செய்து அருளினார். (ஸ்பரிச தீட்சை) அஞ்ஞான பூமிகள் ஏழு: அவை பீஜ சாக்கிரம், சாக்கிரம், மகா சாக்கிரம், சாக்கிர சொப்பனம், சொப்பனம், சொப்பன சாக்கிரம், சுழுத்தி என்பன. தூங்கி விழிப்பதிலிருந்து மறுபடி தூங்குவது வரை உள்ள அஞ்ஞான நிலைகள் விளக்கப்படும். "இராசதத்தில் தாமதம் மேலிடும் பொழுது அதில் பிரதி பிம்பமாயுள்ள சிதாபாசன் சோம்பல், நித்திரை மயக்கங்கள் உடையவன் ஆவன்" தேகமே ஆத்மா போகமே மோட்சம் என்று வாழும் நிலை. திருவடி தீர்த்த அபிஷேகம், விபூதி கவசம், திருவடி சூட்டல் ஆகியவற்றால் சசிவன்னன் தாமத இராசத குணங்கள் ஒடுங்கி அவனது சத்துவகுணம் மேலோங்கச் செய்தார். இராசதத்திற் சாத்துவீகம் பிரதானமாகும் போது அதிற் பிரதி பிம்பமாயுள்ள சிதாபாசன் த்த்துவ ஞான நிட்டனாவான்.

93. ஒழியப்பு லக்கண்உப நிடதப்
பொருள்தெரிய உளஞானமாம்
விழியைக்கொ டுத்துமொழி எனமுப்ப
தப்பொருளும் வெளிஆகவே.

இந்திரிய சுகத்தில் ஆசைகள் ஒழியும்படி உபநிடதங்களில் கூறப்பட்டுள்ள மகா வாக்கியங்களின் அர்த்தம் தெளிவாகும் படியாக ஏதுவாக உள்ள ஞானமாகிய விழியைக் கொடுத்தருளி "ஏ சசிவன்னா தத்வமஸி மகா வாக்கியத்தின் கண்ணுள்ள 'தத் த்வம் அஸி' என்னும் மூன்று பதங்களீன் அர்த்தங்களையும் நீ அனுபவித்தபடி யாவருக்கும் விளக்கமாக கூறுவாய்" என்று குருநாதர் சசிவன்னனது அனுபவத்தைச் சொல்லும்படி கேட்கிறார்.

Koviloor Digital Library

94. நனவைத்து வக்கிமுடி துரியத்தை
முற்றுஇறை நவில்நீதியே
மனவர்க்கம் அற்றஅனு பவம்உற்ற
சிதககன வலிஓதுமே.

சாக்கிர முதல் அந்தமான துரியம் ஈறாக ஆசிரியர் அருளிச் செய்த வண்ணமே தான் அடைந்த மனம் முதலான அந்தக் கரணங்கள் நீங்கிய - நனவிற் சுழுத்தியில் பெற்ற பிரம்ம அனுபவத்தை, திறத்தை சசிவன்னன் கூறத் தொடங்கினான்.

95. புரணம் ஆகவே புறம்உள
புலன்களும் அந்தக்
கரணம் யாவையும் வழங்கிடம்
நனவுஎனக் கண்டேன்.

வெளிப்புறமாகச் செல்லும்படியான ஞானேந்திரியங்கள் கர்மேந்திரியங்கள் ஆகிய பத்தும் மனம் முதலிய அந்தக் கரணங்களும், இவை அனைத்தும் தம்தம் இடங்களில் இருந்து கொண்டு முழுமையாக விஷயங்களோடு பொருந்தி செயல் படுகின்ற நிலையே (வியட்டி) சீவனுக்கு சாக்கிரம் என அறிந்தேன். சாட்சி = விகாரமற்று உதாசீனமாயிருந்து புத்தி முதலியவற்றை விளக்கும் சைதன்னியம் இதற்கு விடயமாகும் உலகனைத்தும் சாட்சியம் எனப்படும். இதை நாம் அறிந்து சாட்சியத்தை விட்டு சாட்சி மாத்திரம் கொள்ள வேண்டும்.

96. புரணம் ஆகிய புறம்பு உள
புலன்கெட அந்தக்
கரணம் யாவையும் வழங்குஇடம்
கனவுஎனக் கண்டேன்.

முழுமையாக பத்து இந்திரியங்களும் ஒடுங்கி நிற்க, மனம் முதலிய அந்தக் கரணங்கள் அனைத்தும் சாக்கிரத்தில் வாசனையினால் கற்பிக்கப் பட்ட விஷயங்களொடு பொருந்தி செயல்படும் நிலையே (வியட்டி) சீவனுக்கு சொப்பனம் என அறிந்தேன்.

Koviloor Digital Library

97. மரணம் ஆகிய திசைஇது
எனும்படி மனாதி
கரணம் யாவையும் இறந்துஉள
சுழுத்தியும் கண்டேன்.

மரணகாலம் போன்றது என்று யாவரும் கூறும்படி மனம் முதலான சகல கரணங்களும் அவித்தையின் கண் ஒடுங்கி இருக்கின்ற (வியட்டி) சீவனுக்கு சுழுத்தி என அறிந்தேன். சீரம், உலகம், தோன்றுகிறது மறைகிறது.

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. - *குறள்:339*

98. எஞ்சல் இன்றிஎக் கரணமும்
இறந்துஇருண்டு இருந்த
துஞ்சல் அங்குஉணர் போதமாம்
துரியமும் கண்டேன்.

சிறிதும் மிச்சமில்லாமல் அகக்கரணம், புறக்கரணம் ஆகிய எல்லாக் கரணங்களும் ஒடுங்கி ஒன்றும் தெரியாமல் இருந்து விடய உணர்வு இல்லாமல் இருந்து ஆன்மாவின் வடிவம் (வியட்டி) சீவனுக்குத் துரியம் என அறிந்தேன். சுழுத்தியில் அஞ்ஞானத்தை அறிந்த அறிவே இப்பொழுது சாட்சியாய் விளங்குவதை அறிவாயாக.

99. துரியம் ஆகிய போதம்ஓர்
துளக்கம்அற்று அனைத்தின்
கரிய தாய்இருந்த இடம்பரன்
நனவுஎனக் கண்டேன்.

வியட்டி சரீரத்திற்கு சாட்சி உடய, சமட்டி சரீரங்களுக்கும், பிரபஞ்சத்திற்கும் சாட்சிரூபப் பிரம்மமாய் இருக்கிறது என்று அறியும் அவஸ்தை ஈசுவர சாக்கிரம். தூல பஞ்ச பூதங்களும், அவற்றிற் தோன்றிய மூன்று சாதிகளாய் இருக்கின்ற தூல சரீர சமட்டியுங்கூடி ஈசுர தூல சரீரம் என்றும் விராட் என்றும் சொல்லப்படும். இந்த விராட் ஆதிசரீரங்கள், சிருட்டியாதி கிருத்தியங்களுக்குக் கூடஸ்தனே ஆகிய பிரம்மமே சாட்சியாய் நின்று விளங்குகிறது என அறியும் இடமே ஈசுவர சாக்கிரம் என்பதாம். 3 சரீரம், 3 அவத்தை, 3 அபிமானம் + கூடஸ்தன் ஆன்மா.

Koviloor Digital Library

100. புணர்ந்த இச்சகத்து ஒழித்து உணர்
போதமாம் தனையே
உணர்ந்த மற்றது பரன்கனவு
எனும்படி உணர்ந்தேன்.

சூக்கும பூதங்கள் ஐந்தும், அவற்றில் தோன்றிய சூக்கும சரீர சமட்டியுங்கூடி ஈசுவர சூக்கும சரீரம் எனவும், இரணிய கருப்பனென்றும் சொல்லப்படும். யான் சர்வ சாட்சி என்னும் பாவனையை விட்டு (இச்சகத்து ஒழித்து) யான் சாட்சி என்றும் பாவனையை உடைய நிலை ஈசுவர சொப்பனமாம்.

101. சான்று சாக்கியம் இறந்திடத்
தான்இருந் தமையும்
தோன்று உறாஇடம் பரன்சுழுத்தி
அதுஎனத் துணிந்தேன்.

இந்தத் தூல சூக்குமமாகிய இரண்டின் வாசனையுடனே கூடியிருக்கின்ற மாயை ஈசுவர காரண சரீரம் என்றும் அவ்வியாகிருதம் என்றும் சொல்லப்படும். யான் சாட்சி என்னும் பாவனையும் விளங்காத அவஸ்தை ஈசுவர சுழுத்தியாம். சுழுத்தி அனுபவம் ஒன்றும் விளங்க வில்லை.

102. மரித்தது என்றுஉணர்ந்து உரைத்தது
மரித்தஇடம் தனிலே
தெரித்த போதம் ஏது அதுபரன்
துரியமாய்த் தெளிந்தேன்.

ஈசுவர சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி ஆகிய மூன்று அவத்தைகளிலும் (சீவதுரியமாகிய சாட்சியை) பிரம்ம ரூபமாய் கருதிய போது (கூடஸ்தனே) பிரம்மம் என ஏகத்துவம் உணரவில்லை. ஈசுவர துரியத்தில் ஏகத்துவம் விளங்கும் ஆனாலும் சிறிது ஐயம் இருக்கும். சத்ரூப சத்தி சித்துரூப சத்தி ஆனந்தரூப சத்தி என்னும் சரீரத்திரயமும் பரிபூரணன், தேஜோமயன் பரமானந்தன் என்னும் அபிமானத்திரயமும் சர்வ வியாபகம் சர்வப் பிரகாசம் சர்வானந்தம் என்னும் அவத்தாத் திரயமும் சுத்தப் பிரம்மும் ஆகிய பத்தும் அஸிபதத்திற்கு வாச்சியம், தேவனும் சுத்தப் பிரம்மும் இலட்சியம்.

Koviloor Digital Library

103. இறைஎ னும்பொருள் துரியமே
என்னைஆண் டவனே
மறையின் அந்தநல் பதப்பொருள்
நனவுஎன மதித்தேன்.

இந்தத் தேஜோமயர் சத்ரூப சத்தியோடு கூடிச் சர்வ வியாபகம் என்னும் சாக்கிர அவஸ்தையை அடைகின்ற போது, அவருக்குத் தேஜோமயர் என்னும் பெயர் போய் பரிபூரணர் என்னும் பெயர் வந்தது. கயிற்றை அறிந்தவுடன் அதில் தோன்றிய பாம்பு வடிவம் அந்த அதிஷ்டான கயிற்றின் வடிவமே என்று உணர்வதைப் போல, பிரம்மமாகிய தன்னிடத்தில் கற்பனையாக சமட்டி வியட்டி வடிவச் சர்வ பிரபஞ்சமும் தோன்றுகிறது என்று உணர்ந்து, பின்னர் அவ்வதிஷ்டான வடிவ பிரம்மமாய் அறியும் நிலை. (சாக்கிரத்தில் கூடஸ்தப் பிரம்மங்களின் ஐக்கியம் உண்டு. சொப்பனத்தில் அதிஷ்டான அத்யஸ்தங்களின் ஐக்கிய அனுபவம் உண்டு.)

104. பண்டை விச்சுவ வாதனைப்
பழுதுபோய் முழுதும்
கண்ட கண்ணதே ஆகிய
கனவதும் கண்டேன்.

யாவும் சின் (அறிவு) மாத்திரமாக விளங்குவதே பிரம்ம சொப்பனம் எனக்கூறுதல்.

105. காட்சி யாவையும் கண்ணது ஆய்
அக்கணும் கரந்த
மாட்சி ஆகிய அகோசரம்
உறக்கமாய் மதித்தேன்.

நாமரூபங்களைப் பிரம்ம வடிவமாய் கண்ட விருத்தியும் ஒடுங்கிய நிலை சுழுத்தி. காரணமான ஆனந்த ரூப சத்தியோடு பரப்பிரம்மங்கூடி சர்வ ஆனந்தம் என்னும் சுழுத்தி அவத்தையை அடைகின்ற போது அதற்குப் பரப்பிரம்மம் என்கிற பெயர் போய் பரமானந்தர் என்கிற பெயர் வந்தது.

Koviloor Digital Library

106. அரும்த வாமறை அந்தம் ஆம்
அகோசரம் தனில்நீ
இருந்த ஆறுஅறி வித்தஆறு
எங்ஙனம் இசைப்பேன்.

சுத்தப் பிரம்ம்மாய் இருப்பது இவ்வவஸ்த்தையை விவரமாகக் கூற இயலாமையின் எங்ஙனம் இசைப்பேன். சிரவண மனனத்திற்குப் பின் நிதித்தியாசனம் செய்பவர்கள் நிட்டை கூடி, உள்ளங்கை நெல்லிக்கணியைப் போல அகண்ட பரிபூரண சச்சிதானந்த பிரமத்தை அனுபவிக்கின்ற நிலைகளின் வேறுபாடுகளாம்.

107. எம்பி ரான்இடம் தொறும்இடந்
தொறும்அது அதுவாய்த்
தம்பிரான் நடம்செ யும்வகை
சாற்றுமாறு அறியேன்.

அவ்வவஸ்தையில் விளங்கும் பொருள்கள் :- சாக்கிரத்தில் ஸ்திர விஷயம், சொப்பனத்தில் அஸ்திர விஷயம், சுழுத்தியில் அஞ்ஞானம், துரியத்தில் துவம்பத லட்சியம், ஈசுவர சாக்கிரம் முதலிய அவஸ்தைகளில் அகண்ட பரிபூரண சச்சிதானந்தப் பிரம்மம்.

108. ஆவி யேஅடி யேன்செய்கைம்
மாறுஉணக்கு என்எனில்
பாவி யேனது தானும்உன்
னுடையதாம் பண்டே.

எனது உயிராகிய குருநாதரே முக்தியை அளித்த பேருபகாரத்திற்கு அடியேன் செய்கின்ற பிரதி உபகாரம் தேவரீர்க்கு என்ன என்றால் என்னை அடிமை கொண்ட அன்றே பாவியாகிய எனது உடல், பொருள், ஆவி மூன்றும் தங்களுடையது என்று சசிவன்னன் கூறினான்.

109. ஆவல் செய்துஎனது ஆக்கைஉள்ள
அளவுநின் அடியார்க்கு
ஏவல் செய்வதே அன்றிமற்று
ஒன்றுநான் அறியேன்.

Koviloor Digital Library

அடியேனது உடல் இருக்கும் அளவும், தேவரீரது தொண்டர்களுக்கு அன்பு கொண்டு பணி விடைகள் செய்வதே கைம்மாறு அன்றி வேறு ஒன்றையும் கைம்மாறாக நான் உணரவில்லை. ஆதலின் இதையே கைம்மாறாகக் கொள்ள வேண்டும்.

110. இறவுஇல் எப்பத மும்பெற
வேண்டிலேன் என்றும்
பிறவி வேண்டுவன் நின்திருப்
பணிசெயப் பெறினே.

தேவரீருக்கு சிறந்த பணிவிடைகளைச் செய்யும் பேறு பெற்றால் அழிவின்றி எந்த முத்தியையும் பெற விரும்பேன் எப்பொழுதும் பிறவியை விரும்புவேன் குருவின் பணிவிடையால் தான் ஞானம் பெற்றதை மறவாததால் சசிவன்னன் குரு பணியை செய்ய விரும்புகிறான் என்பது கருத்து.

111. என்றுபல கால்விழும் எழும்தொழும்
அழும்புரியும் என்னை இனியான்
நின்றுபல வாகஉரை செய்தஅவன்
அன்பினொடு நெஞ்சுஉருகியே.

ஆசிரியர் சந்நிதியில் நின்று இவ்வாறு பலவிதமாய்க் கூறிய அந்த சசிவன்னன் அன்பினால் மனமுருகி இனிமேல் யான் செய்வது ஒன்றும் இல்லை என்று கூறி பல முறை நமஸ்கரித்தான், எழுந்து நிற்பான் மீண்டும் நமஸ்கரிப்பான். ஆனந்தக் கண்ணீர் சொரிவான். அனுபவத்தினால் ஆனந்தம் பெற்ற சசிவன்னன் அதன் வெளிப்பாடாக வணங்குகிறான், உருகுகிறான்.

112. ஏட்டில்அறிவு இன்றிஇறை தன்னில் அறிவு
இன்றிஇவ் உடம்பினுடனே
வீட்டில்உறை வானைஇனி வீடுபெறும்
என்பதுவி ளம்பிகிலேமே.

சாத்திரங்களால் அறிந்த பொருளைச் சிந்திக்காமல் த்த்துவ ஞானமும் ஈசுவரன் வேறு தான் வேறு என்ற சிந்தனையும் இல்லாமல் இத்தேகத்துடனே சர்வதுக்க

Koviloor Digital Library

நிவர்த்தி, பரமானந்தப் பிராப்தி வடிவ மோட்சத்தின் கண் இருக்கும் சசிவன்னன் தேகம் நீங்கிய பிறகு முத்தியைப் பெறுவன் என்று கூறுவது பொருந்தாது.

113. வஞ்சவலி யால்நரகில் வீழ்பிதிரர்
அந்நரகு பாழ்படமிகா
விஞ்சைவலி யால்அடைய ஏறினர்
சுராதிபர்கள் மேல்உலகமே.

சசிவன்னன் மோட்சம் அடைந்த புண்ணியத்தின் மகிமையை இவ்வாறு விளக்குகிறார். முதலில் பாவ வினையால் அவன் குலத்தினர் நரகம் சென்றனர் என கூறினார். புண்ணியத்தின் மிகுதியும் இப்பிறவியிலேயே பலன் தரும் என்பதால் நரகத்திலிருந்த சசிவன்னன் வம்சத்தினர் மேல் உலகம் சென்றதைக் கூறினார்.

114. தேவரும்ம னித்தரும்இ வன்தொழில்
வியந்துரைசெ யப்படுவதோ
மூவரும்வ ணங்கிமுடி யால் அவனது
ஏவல்செய முந்துவரே.

அயன், மால், உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளும் தமது சிரம் தாழ்த்தி வணங்கி அந்த சசிவன்னனுக்கு சேவை செய்தற் பொருட்டு நான் நான் என முந்துவார்கள், இங்ஙனமானால் இந்திரன் முதலிய தேவர்களும் அரசன் முதலியவர்களும் (மனிதர்களும்) இந்த சசிவன்னனுக்குச் செய்த சேவை அதிசயித்துச் சொல்லத் தக்கதா! அன்று. இப்படி சசிவன்னன் அடைந்த ஞானம் அருமையானதால் அவனுக்கு எல்லோரும் பணிசெய்ய முற்பட்டதாகக் கூறி ஞானியின் பெருமையை விளக்குகிறார்.

115. ஞானியைந ரன்சுரன்எ னாதுஒழிக
ஞாலம்உய நாதன்அருளால்
மேனியது கொண்டுதனை நல்கவரும்
என்று அறையும் வேதமுடியே.

உலகத்தார் உய்யும் பொருட்டு (இறைவனே) காரணப் பிரம்மமே கருணையினால் திருமேனியைத் தாங்கிக் கொண்டு தற்சொரூபத்தை அனுகிரகிக்க எழுந்தருளும் என

Koviloor Digital Library

உபநிடதங்கள் கூறும். தத்துவ ஞானியை, மனிதன் எனவும், தேவன் எனவும் கூறுது விடுக. (நாதன் - மும்மூர்த்திகளுக்கு இறைவன்) அருவனாகிலும் அன்பர்க்கு உருவனாய் வருவன் என்பது மாமறை சொல்லுமே என்று முதலில் கூறிய காளி தேவி அதனை மீண்டும் இங்கு நிச்சயமாய்க் கூறுகிறாள்.

சசிவன்னபோதம் முற்றிற்று.

Koviloor Digital Library

Koviloor Digital Library







